


ISSN: 2582–5518

# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




சனி ❖ பிப்ரவரி. 10, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 123 ❖ ரூ.10

## தாசில்தாரை தாக்கியதாக வழக்கு; நீதிமன்றத்தில் மு.க.அழகிரி நேரில் ஆஜர்

# பரபரப்பு

## 2011-ம் ஆண்டு நடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்காளர்களுக்கு பணம் கொடுத்ததாக புகார் 12-ம் தேதிக்கு தீர்ப்பை ஒத்திவைத்து நீதிமன்றம் உத்தரவு

மதுரை : பிப். 10–

2011-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலின் போது தாசில்தாரை தாக்கிய வழக்குத் தொடர்பான விசாரணைக்கு முன்னாள் மத்திய அமைச்சர் மு.க.அழகிரி மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் நேரில் ஆஜரானார்.



கடந்த 2011-ம் ஆண்டு ஏப்ரல் மாதம், சட்டப்பேரவைத்தேர்தல் நடைபெற்றது. அப்போது மதுரைமாவட்டம்மேலூர் அருகேயுள்ள வெள்ளலூர் அம்பலக்காரன்பட்டி வல்லடிகாரர் கோயிலுக்குள், வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பதாக புகார் அளிக்கப்பட்டது.

இதையடுத்து மேலூர் தேர்தல் அதிகாரியும், வட்டாட்சியருமான காளிமுத்து மற்றும் தேர்தல் அலுவலர்கள், வீடியோ கேமராமேனுடன் அங்கு சென்று வீடியோ எடுத்தனர். இதற்கு மு.க.அழகிரி தரப்பு கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அப்போது இரு தரப்பினருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது.

இதையடுத்து அழகிரியுடன் இருந்தவர்கள் தன்னை அடித்து, உதைத்ததாக தாசில்தார் காளிமுத்து கீழவளவு காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இந்த புகாரின் பேரில், முன்னாள் மத்திய அமைச்சர் மு.க.அழகிரி, மதுரை முன்னாள் துணை மேயர் மன்னன் மற்றும் திமுக நிர்வாகிகளான ரகுபதி, திருஞானம் உள்ளிட்ட 21 பேர் மீது 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வந்தது.

இந்த வழக்கில் சாட்சி விசாரணை முடிந்து, விசாரணை நேற்று நடைபெற்றது. இதற்கு முன்னாள் மத்திய அமைச்சரும் தமிழ்நாட்டின் தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலினின் சகோதரருமான மு.க.அழகிரி உள்ளிட்ட குற்றம் சாட்டப்பட்டவர்கள் நேரில் ஆஜராகினர். இதையடுத்து இவ்வழக்கில் வருகிற 12-ம் தேதி திங்கள் கிழமை தீர்ப்பு வழங்கப்படும் எனக்கூறி நீதிபதி வழக்கை ஒத்திவைத்தார். மு.க.அழகிரி நீதிமன்றத்தில் ஆஜரானதை அடுத்து, அவருடன் ஏராளமான திமுகவினர் மற்றும் அவரது ஆதரவாளர்கள் குழுமியிருந்ததால் நீதிமன்ற வளாகத்தில் பரபரப்பு நிலவியது.

## சரண் சிங், பி.வி.நரசிம்ம ராவ், எம்.எஸ்.சுவாமிநாதன் ஆகியோருக்கு இந்திய நாட்டின் மிக உயரிய பாரத ரத்னா விருது – பிரதமர் மோடி அறிவிப்பு

புதுடெல்லி : பிப். 10–

முன்னாள் பிரதமர்கள் சவுத்ரி சரண் சிங், பி.வி.நரசிம்ம ராவ், வேளாண் விஞ்சானி எம்.எஸ்.சுவாமிநாதன் ஆகியோருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.



இதனை பிரதமர் மோடி தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். முன்னாள் பிரதமர் சவுத்ரி சரண் சிங்குக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட இருப்பது குறித்த அறிவிப்பில், "முன்னாள் பிரதமர் சவுத்ரி சரண் சிங்குக்கு பாரத ரத்னா விருது வழங்கப்படுவது நமது அரசின் அதிர்ஷ்டம். நாட்டிற்கு அவர் ஆற்றிய ஒப்பற்ற பங்களிப்புக்காக இந்த மரியாதை அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. அவர் தனது முழு வாழ்க்கையையும் விவசாயிகளின் உரிமைகள் மற்றும் நலனுக்காக அர்ப்பணித்தவர். உத்தரப்பிரதேச முதல்வராக இருந்தாலும் சரி, உள்துறை அமைச்சராக இருந்தாலும் சரி, எம்எல்ஏவாக இருந்தாலும், தேசத்தைக் கட்டியெழுப்ப அவர் எப்போதும் உத்வேகம் அளித்தார். அவசரநிலைக்கு எதிராகவும் உறுதியாக நின்றார். நமது விவசாய சகோதர சகோதரிகளுக்கு அவர் காட்டிய அர்ப்பணிப்பும், நெருக்கடி நிலையின்போது ஜனநாயகத்திற்கான அவரது அர்ப்பணிப்பும் ஒட்டுமொத்த தேசத்திற்கும் உத்வேகம் அளிக்கிறது" என பிரமதர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதைபோல், முன்னாள் பிரதமர் பி.வி.நரசிம்ம ராவுக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட உள்ளது குறித்த அறிவிப்பில், "நமது முன்னாள் பிரதமர் பி.வி.நரசிம்ம ராவ்-க்கு பாரத ரத்னா விருது வழங்கப்படும் என்பதை பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஒரு சிறந்த அறிஞராகவும், அரசியல் தலைவராகவும் இருந்து பல்வேறு பதவிகளின் மூலம் நாட்டிற்காக அவர் பணிபுரிந்தார். ஆந்திரப் பிரதேச முதல்வர், மத்திய அமைச்சர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் என ஒவ்வொரு பணியின் மூலமும் அவர் சமமாக நினைவுகூரப்படுகிறார். இந்தியா பொருளாதார ரீதியாக முன்னேற அவரது தலைமை முக்கிய பங்கு வகித்தது. நாட்டின் செழிப்பு மற்றும் வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளத்தை அவர் அமைத்தார்.

நரசிம்ம ராவ் பிரதமராக இருந்த காலம், பொருளாதார வளர்ச்சியின் புதிய சகாப்தத்தை வளர்த்தது. மேலும், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை, மொழி மற்றும் கல்வித் துறைகளில் அவர் வழங்கிய பங்களிப்புகள் மகத்தானவை. இந்தியாவின் கலாச்சாரம் மற்றும் அறிவுசார் பாரம்பரியத்தை செழுமைப்படுத்திய ஒரு தலைவராக நரசிம்ம ராவ் திகழ்ந்தார்" என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்எ.எஸ். சுவாமிநாதனுக்கு பாரத ரத்னா விருது வழங்க இருப்பது குறித்த அறிவிப்பில், "விவசாயம் மற்றும் விவசாயிகள் நலனில் டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆற்றிய மகத்தான பங்களிப்பைப் போற்றும் வகையில், இந்திய அரசு அவருக்கு பாரத ரத்னா விருது வழங்குவது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. சவாலான காலங்களில் இந்தியா விவசாயத்தில் தன்னிறைவை அடைய உதவுவதில் அவர் முக்கிய பங்கு வகித்தார். மேலும், இந்திய விவசாயத்தை நவீனமயமாக்குவதில் சிறந்த முயற்சிகளை அவர் மேற்கொண்டார்.

கண்டுபிடிப்பாளராக, வழிகாட்டியாக, ஏராளமான மாணவர்களிடம் கற்றல் மற்றும் ஆராய்ச்சியை ஊக்குவித்தவராக திகழ்ந்த அவரது விலைமதிப்பற்ற பணியை நாங்கள் அங்கீகரிக்கிறோம். டாக்டர் சுவாமிநாதனின் தொலைநோக்கு தலைமை இந்திய விவசாயத்தை மாற்றியமைத்தது மட்டுமல்லாமல், நாட்டின் உணவுப் பாதுகாப்பு மற்றும் செழுமையையும் உறுதி செய்துள்ளது. நான் நெருக்கமாக அறிந்த சிலரில் அவரும் ஒருவர். அவருடைய நுண்ணறிவையும், சேவையையும் நான் எப்போதும் மதிப்பேன்" என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். சில தினங்களுக்கு முன்பு பிஹார் லால் கிருஷ்ண அத்வானி ஆகியோருக்கும் பாரத ரத்னா விருது வழங்கப்பட இருப்பது குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## புதுக்கோட்டையில் பெண் குழந்தைகளின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தினை கலெக்டர் மெர்சி ரம்யா துவக்கி வைத்தார்

புதுக்கோட்டை

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின்கீழ், பெண் குழந்தைகளின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தினை, மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா நேற்று கொடியசைத்து துவக்கி வைத்தார்.



பின்னர் அவர் தெரிவித்ததாவது; தமிழ்நாடு முதலமைச்சர் பெண் குழந்தைகளின் நலனிற்காகவும், கல்விக்காகவும், பாதுகாப்பிற்காகவும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்திவருகிறார;கள். அந்தவகையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் எண்ணற்றத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, இன்றையதினம் பெண் குழந்தைகளின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு பிரச்சார வாகனம் துவக்கி வைக்கப்பட்டது.

இந்த விழிப்புணர்வு வாகனமானது இன்று[பிப்ரவரி-9] முதல் 22 -ஆம் தேதி வரை புதுக்கோட்டைமாவட்டம் முழுவதும் சென்று பெண் குழந்தைகளின் முக்கியத்துவம் குறித்தும், அவர்களின் பாதுகாப்புகள் குறித்தும் விழிப்புணர்வு பிரச்சாரம் செய்யப்படவுள்ளது.

மேலும் இவ்வாகனத்தின் மூலம், மாவட்டத்தில் குழந்தை பாலின விகிதம் மற்றும் பிறப்பு பாலின விகிதத்தை உயர்த்துதல். பாலின பாகுபாடு அடிப்படையில் குழந்தைகளின் பாலினம் அறிந்துகொல்லப்படுவதை தடுத்தல். பெண் குழந்தைகளின் பிறப்பினை உறுதி செய்து அவர்களின் கல்வி, திறன் மற்றும் பங்கேற்பினை உறுதிப்படுத்துதல். பள்ளிகளில் பெண் குழந்தைகளின் சேர்க்கையை அதிகப்படுத்துதல் மற்றும் தொடர்ந்து கல்விபெறுவதை உறுதி செய்தல். வளரிளம் பருவத்தினருக்கான உட்டச்சத்து, சுகாதாரம் மற்றும் மாதவிடாய் பற்றிய கல்வியை உறுதிப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வுகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி பிரச்சாரம் செய்யப்படவுள்ளது.

எனவே தமிழக அரசின் மூலம் பெண் குழந்தைகளின் நலனிற்காக மேற்கொள்ளப்படும் இதுபோன்ற நடவடிக்கைகளை அனைவரும் பின்பற்றி பாதுகாப்பான சமூகத்தினை உருவாக்கிட வேண்டும் தெரிவித்தார். இந்நிகழ்வில், மாவட்ட சமூகநல அலுவலர் கோகுலப்பிரியா, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் வசந்தகுமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## "நாட்டில் இருந்து அகற்றப்பட வேண்டிய கட்சி திமுக" அவிநாசி ஆர்ப்பாட்டத்தில் இபிஎஸ் பேச்சு

திருப்பூர் : பிப். 10–

"அதிமுக மக்களிடத்தில் அபரிமிதமான வளர்ச்சியை பெற்றிருக்கும் பொறாமையால் தான், இன்றைக்கு தீய சக்திகள் எம்ஜிஆரை விமர்சிக்கிறார்கள். எம்.ஜிஆர் அதிமுகவை தொடங்கியபோது, தீயசக்தி திமுகவை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று சொன்னார். திமுக நாட்டில் இருந்து அகற்றப்பட வேண்டிய கட்சி" என எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.



மறைந்த அதிமுக நிறுவனர் எம்.ஜி.ஆரை, மிக மோசமாக விமர்சித்த நீலகிரி எம்.பி. ஆ.ராசாவை கண்டித்து அவிநாசியில் நேற்று அதிமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் கலந்து கொண்டு பேசிய முன்னாள் முதல்வரும், அதிமுக பொதுச்செயலாளருமான கே.பழனிசாமி, "தெய்வப்பிறவியான எம்.ஜி.ஆரை ஆ.ராசா எம்.பி. வேண்டுமேன்றே திட்டமிட்டு மிக மோசமாக பேசி உள்ளார். இந்த இயக்கத்தை நிறுவியவர். இன்றைக்கு 2 கோடி தொண்டர்கள் அதிமுகவில் இருக்கிறார்கள் என்றால் அதற்கு காரணம் எம்ஜிஆர் தான்.

அதிமுக மக்களிடத்தில் அபரிமிதமான வளர்ச்சியை பெற்றிருக்கும் பொறாமையால் தான், இன்றைக்கு தீய சக்திகள் எம்ஜிஆரை விமர்சிக்கிறார்கள். எம்.ஜிஆர் அதிமுகவை தொடங்கியபோது, தீயசக்தி திமுகவை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று சொன்னார். திமுக நாட்டில் இருந்து அகற்றப்பட வேண்டிய கட்சி. ஆ.ராசாவுக்கு நாவடக்கம் தேவை. வீட்டுக்கு அடங்காத பிள்ளை ஊருக்கு அடங்கும் என்பார்கள். மக்கள் வெகுண்டெழுந்தால் ராசா தாக்குப்பிடிக்க முடியுமா? கோடிக்கணக்கான தொண்டர்களை கொண்ட இயக்கம் இது. எம்ஜிஆரின் தொண்டர்கள் மனதால் காயம்பட்டுள்ளனர்.

கருணாநிதி குடும்பம் கடனில் தத்தளித்தபோது, அவருக்கு உதவுவதற்காக அவரது திரைப்பட தயாரிப்பு நிறுவனத்திற்காக 'எங்கள் தங்கம்' என்ற படத்தில் சம்பளம் வாங்காமல், எம்ஜிஆரும், ஜெயலலிதாவும் நடித்துக்கொடுத்தார்கள். அந்த படத்தின் மூலம் சம்பாதித்தது அந்த குடும்பம். கருணாநிதி கடனில் இருந்து தப்பித்ததாக முரசொலி மாறனே சொன்னதாக, முரசொலியில் வந்துள்ளது. எதிரியையும் வாழ வைத்தவர் எம்ஜிஆர். 1967-ம் ஆண்டு எம்.ஜிஆரால் திமுக ஆட்சிக்கு வந்தது. துரைமுருகனை வாழவைத்தவர் தான் எம்ஜிஆர். ஆனால், கண்ணுக்கு தெரியாத காற்றிலும் ஊழல் செய்தவர் தான் ஆ.ராசா.

விஞ்ஞான முறையில் ஊழல் செய்யத் தெரிந்த கட்சி திமுக. ராஜா உளறுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும். நீங்கள் திருந்தாவிட்டால், மக்கள் உங்களை திருத்துவார்கள். எம்ஜிஆர், ஜெயலலிதா என தமிழகத்தில் தொடர்ந்து 30 ஆண்டு கால ஆட்சி புரிந்த கட்சி அதிமுக. அந்த காலகட்டத்தில் தமிழ்நாடு முன்னேற்றம் கண்டது. நிறைய திட்டக்களை நிறைவேற்றி தந்தோம். உயர்கல்வியில் 2030-ல் அடைய வேண்டிய இலக்கை, நாம் நம்முடைய ஆட்சியிலேயே ஈட்டினோம்.

அதிகமான அரசு கல்லூரிகள், 11 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 7 சட்டக்கல்லூரிகள், வேளாண்மை, பொறியியல் என ஏராளமான கல்லூரிகளை திறந்து, அடித்தட்டு குடும்பங்களின் குழந்தைகளை உயர்கல்வி படிக்க வைத்த அரசாங்கம் அதிமுக தான். கோவை, திருப்பூர் மற்றும் ஈரோடு ஆகிய 3 மாவட்ட மக்கள் 50 ஆண்டு காலம் போராடி வந்த அத்திக்கடவு - அவிநாசி திட்டத்தை அதிமுக நிறைவேற்றியது. மாநில அரசு முழுமையாக நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டு, 90 சதவீத பணிகள் நிறைவேற்றப்பட்டன. ஆனால் 10 சதவீத பணிகள் 2 ஆண்டுகாலம் 8 மாதங்களாக திமுக ஆட்சியில் நடந்து கொண்டிருக்கிறது. அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அத்திக்கடவு - அவிநாசி திட்டம் முடக்கி வைக்கப்பட்டுள்ளது.

6 மாதத்தில் முடித்திருக்கலாம். பவானியில் இருந்து வீணாக கடலில் கலக்கும் நீரை தடுத்து, இந்த திட்டத்தை என்றைக்கோ கொண்டு வந்திருக்கலாம். தமிழ்நாடு முழுவதும் 2 ஆயிரம் மினி கிளினிக்குகளை கொண்டுவந்தோம். அதுவும் ரத்து செய்த அரசாங்கம் தான் விடியா திமுக அரசாங்கம். திருப்பூர், கோவை, அவிநாசி என அத்தனை கூட்டுகுடிநீர் திட்டங்களையும் நிறைவேற்றியது அதிமுக. நான் கொண்டுவந்த 4-ம் குடிநீர் திட்டத்தை உதயநிதி ஸ்டாலின் நாளை (பிப்.10) ஸ்டிக்கர் ஒட்டி திறக்க இருக்கிறார். திமுக ஆட்சியில் எந்த திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது? அதிமுக கொண்டுவந்த

4ம் பக்கம் பார்க்க

## பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பான நகரமாக சென்னை உள்ளது காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் பேட்டி

சென்னை : பிப். 10, வெடிகுண்டு மிரட்டல் தொடர்பாக தேவையில்லாமல் பதற்றம் அடைய வேண்டாம் என சென்னை மாநகர காவல் ஆணையர் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை 13 பள்ளிகளுக்கு இமெயில் மூலம் மர்மநபர்கள் வெடிகுண்டு மிரட்டல் விடுத்தனர். பின்னர் இது வெறும் புரளி என தெரியவந்தது. பள்ளி நிர்வாகம் அளித்த புகாரின்படி, போலீசார், மின்னஞ்சல் அனுப்பிய மர்ம நபர் மீது வழக்கு பதிந்து, சைபர் கிரைம் போலீசார் உதவியுடன் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதனிடையே மிரட்டல் விடுத்த நபரை பிடிக்க மத்திய உள்துறை அமைச்சகத்தின் உதவியோடு இன்டர்போல் போலீசை நாட சென்னை போலீசார் முடிவு செய்துள்ளனர்.

இந்நிலையில் இது குறித்து சென்னை மாநகர காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் செய்தியாளர்களை சந்தித்து விளக்கம் அளித்தார். அப்போது; பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் தொடர்பாக வழக்குபதிவு செய்யப்பட்டுள்ளது.



பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த விவகாரம் தொடர்பாக தொடர் விசாரணை நடைபெற்று வருகிறது. அது குறித்த விவரங்களை தற்போது வெளியிட இயலாது.

வெடிகுண்டு மிரட்டல் தொடர்பாக தேவையில்லாமல் பதற்றம் அடைய வேண்டாம். வெடிகுண்டு மிரட்டல் விடுத்த நபரை கண்டறிந்து கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். வெடிகுண்டு மிரட்டல் விடுத்த நபரை விரைவில் கைது செய்து விடுவோம். இது போன்ற வெடி குண்டு மிரட்டல்கள் தொடர்பான தகவல்கள் வந்தால் பெற்றோர்கள் பதற்றம் அடைய வேண்டியதில்லை. சென்னை பெருநகர காவல்துறையினர் சரியான முறையில் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர். பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பான நகரமாக சென்னை உள்ளது என்று கூறினார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் 131–வது ஆண்டு விழா



ஆவுடையார்கோவில் : பிப். 10–

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியின் 131 வது ஆண்டு விழா பள்ளி வளாகத்தில் கொண்டாடப்பட்டது.

ஆங்கிலேயர் காலத்திலேயே தொடங்கப்பட்ட புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் தாலுகாவில் இயங்கி வரக்கூடிய இப்பள்ளிக்கூடத்தின் 131 வது ஆண்டு விழா வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சிக்கு ஆவுடையார்கோவில் வட்டார கல்வி அலுவலர் புவனேஸ்வரி மலர்விழி தலைமை தாங்கினார். வட்டார கல்வி அலுவலர் நரசிம்மன், திருப்பெருந்துறை ஊராட்சி மன்ற தலைவர் சந்திர ராஜமாணிக்கம், பள்ளி மேலாண்மை குழு தலைவர் சிவகாமி, பெற்றோர் ஆசிரியர் கழகம் தலைவர் சக்திவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளியின் தலைமை ஆசிரியர் லட்சுமி காந்தன் அனைவரையும் வரவேற்று பேசினார், ஆண்டறிக்கையை தமிழ் ஆசிரியர் பூங்கொடி வாசித்தார், ஆவுடையார் கோவில் வட்டார வளமைய ஆசிரிய பயிற்றுனர் ஆரோக்கியராஜ், பள்ளி மேலாண்மை குழு கல்வியாளர் கணேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

விளையாட்டுப் போட்டிகளில் பரிசு பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது. மாணவர்களுடைய திறமையை வெளிப்படுத்த கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டது. கலைத்திருவிழாவில் மாநில அளவில் களிமண் சுதை வேலை போட்டியில் மாநில அளவில் 2 ஆம் இடம் பெற்ற 8ஆம் வகுப்பு மாணவன் காரிமுத்துவிற்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் கேடயமும் பள்ளியின் சார்பாக வழங்கி சிறபித்தனர். நிகழ்ச்சியில் 500க்கும் மேற்பட்ட மாணவர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

# கோவை மதுக்கரை அருகே தங்க நகை பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலையில் தீ விபத்து



கோவை : பிப். 10–

கோவை அருகே நகைப்பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலையில் ஏற்பட்ட திடீர் தீ விபத்து காரணமாக அடுத்தடுத்த நிறுவனங்களுக்கும் தீ பரவி வருவதால் பொது மக்களிடையே அச்சம் நிலவி வருகிறது.

கோவை அடுத்த குனியமுத்தூர் சுற்றுவட்டார பகுதிகளில் ஏராளமான தொழிற்சாலைகள் மற்றும் தொழிற்சாலைகளின் குடோன்கள் இயங்கி வருகின்றன. இங்கு பல்வேறு விதமான பொருட்கள் தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு மற்றும் இந்தியா முழுவதும் அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் ரஷீத் என்பவருக்கு சொந்தமான 'EMBELLSGE' என்ற நிறுவனம் குனியமுத்தூர் அடுத்த அறிவொளி நகர பகுதியில் செயல்பட்டு வருகிறது. இங்கு நகைக்கடைகளில், நகைகளை வைக்க பயன்படுத்தப்படும் நகைப்பெட்டிகள் தயாரிக்கப்பட்டு பல்வேறு நிறுவனங்களுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இந்த பணியில் நூற்றுக்கும் மேற்பட்ட ஊழியர்கள் இரவு பகலாக ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில் நேற்று மதியம் 50-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், நகைப்பெட்டிகளை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது திடீரென நிறுவனத்தின் ஒரு பகுதியில் தீ விபத்து ஏற்பட்டு தொழிற்சாலை முழுவதும் தீ பரவத் துவங்கியது. இதனால் அதிர்ச்சி அடைந்த தொழிலாளர்கள், உடனடியாக அங்கிருந்து வெளியேறினர். அடுத்த சில நிமிடங்களில் தொழிற்சாலை முழுவதும் மளமளவென தீப்பிடித்து எரியத் துவங்கியது.

நிறுவனத்தின் உள்ளே வார்னிஷ் உள்ளிட்ட எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்கள் இருந்ததாக கூறப்படுகிறது. இதனால் அதிக வெப்பம் காரணமாக தொழிற்சாலையில் இருந்த இயந்திரங்களும் வெடித்து சிதறத் தொடங்கின. இந்த தீ விபத்து காரணமாக கரும்புகை அந்த பகுதி முழுவதும் சூழ்ந்துள்ளது.

இதுகுறித்து தகவல் அறிந்ததும், கோவைப்புதூர் தீயணைப்பு நிலைய வீரர்கள் விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். தண்ணீர் கொண்டு தீயை அணைக்க முடியாததால் ரசாயன நுரை கொண்டு தீயை கட்டுப்படுத்தும் பணியில் தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதனிடையே இந்த தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்து அருகாமையில் உள்ள பிளாஸ்டிக் குடோனுக்கும் பரவியதால் தீ மேலும் பரவும் அபாயம் உருவாகி உள்ளது. இதையடுத்து தீயை கட்டுக்குள் கொண்டுவரும் பணியில் தீயணைப்புத் துறையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இந்த சம்பவம் காரணமாக அப்பகுதியில் பெரும் பரபரப்பு நிலவி வருகிறது.

# கர்நாடகாவில் ஹுக்கா விற்க, பயன்படுத்த தடை : அமைச்சர் அறிவிப்பு



பெங்களூரு : பிப். 10–

கர்நாடகாவில் ஹுக்கா போதைப் பொருளை விற்பனை செய்யவும், பயன்படுத்தவும், அது தொடர்பான விளம்பரங்களை வெளியிடவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கர்நாடக சுகாதாரத் துறை அமைச்சர் தினேஷ் குண்டுராவ் பெங்களூருவில் செய்தியாளர்களிடம் கூறியது: "கர்நாடகாவில் அதிகரித்து வரும் ஹுக்கா (நீரை வடிக்கட்டி குழாய் மூலம் புகைப்பிடிப்பது) பயன்பாட்டால் இளைஞர்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். உடலுக்கு ஆபத்தை விளைவிக்கும் ஹுக்கா பார்களை தடை செய்ய வேண்டும் என கோரிக்கை எழுந்தது. இது குறித்து வல்லுநர் குழு அமைத்து பல கட்டங்களாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதில் ஹுக்கா பயன்படுத்தினால் மூளை, இதயம், நுரையீரல் உள்ளிட்டவை கடுமையாக பாதிக்கப்படுவது கண்டறியப்பட்டது. இதனைத் தொடர்ந்து கர்நாடகாவில் ஹுக்கா பயன்படுத்தவும், விற்பனை செய்யவும், அதனை பதுக்கிவைக்கவும், அது தொடர்பான விளம்பரங்களை வெளியிடவும் உடனடியாக தடை விதிக்கப்படுகிறது. நேற்று முன்தினம் வியாழக்கிழமை முதல் ஹுக்கா பார்கள் அனைத்தும் மூட உத்தரவிடப்பட்டுள்ளது.

அனைத்து வகையான ஹுக்கா, புகையிலை அல்லது நிகோடின் இல்லாத ஹுக்கா, இனிப்பு ஹுக்கா, ஷீஷா (ஹுக்கா நீர் குழாய்) மற்றும் ஹுக்கா தொடர்புடைய அனைத்து தயாரிப்புகளும் தடை செய்யப்பட்டுள்ளன. இதனை மீறுவோர் மீது சிகரெட் மற்றும் இதர புகையிலை பொருட்கள் சட்டம், குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் நலச் சட்டம், உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலை சட்டம் ஆகியவற்றின் கீழ் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்." என்று தினேஷ் குண்டுராவ் தெரிவித்தார்.

# நாடு முழுவதும் 96.88 கோடி பேர் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க தகுதி : இந்திய தேர்தல் ஆணையம் தகவல்




டெல்லி, பிப். 10–

நாடு முழுவதும் 96.88 கோடி பேர் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. கடந்த 2019 நாடாளுமன்ற தேர்தலைவிட வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 6 சதவீதம் வாக்காளர்கள் அதிகம் உள்ளனர்.

ஆண் வாக்காளர்கள் 49.7 கோடி, பெண் வாக்காளர்கள் 47.1 கோடி, மூன்றாம் பாலினத்தவர் 48,044 பேரும் மாற்றுத்திறனாளிகள் 88.35 லட்சம் பேர் உள்ளனர். புதிய வாக்காளர்கள் எண்ணிக்கை 2.63 கோடியாக உள்ளது. புதிய வாக்காளர்களில் 1.41 கோடி பேர் பெண்கள், 1.22 கோடி பேர் ஆண்கள் ஆவர். 17 வயது நிறைவடைந்த உடனேயே வாக்காளராக பதிவு செய்தவர்கள் 10.64 லட்சம் பேர் விண்ணப்பித்தனர்.

2019ம் ஆண்டில் மொத்தம் 89.6 கோடி பேர் வாக்களிக்க தகுதி பெற்றனர். 2024ம் ஆண்டில் 6 சதவீதம் உயர்ந்து 96.8 கோடி பேர் தகுதி பெற்றனர். 2019ம் ஆண்டில் ஆண் வாக்காளர்கள் 46.5 கோடியாகவும், 43.1 கோடி பெண் வாக்காளர்கள் ஆகவும் இருந்தனர். தற்போது 2024ம் ஆண்டில் 49.7 கோடி பேரும், பெண் வாக்காளர்கள் 47.1 கோடியாக தகுதி பெற்றுள்ளனர். 2019ம் ஆண்டில் 39,683 பேராக இருந்த மூன்றாம் பாலினத்தவர்கள் தற்போது 2024ம் ஆண்டில் 48,044 பேராக உள்ளனர்.

# புதுக்கோட்டை மச்சுவாடி அரசு முன் மாதிரி மேல்நிலைப் பள்ளி ஆண்டு விழா



புதுக்கோட்டை , பிப். 10–

புதுக்கோட்டை அரசு முன்மாதிரி மேல்நிலைப் பள்ளியில் ஆண்டு விழாவானது பள்ளி முதல்வர் பெ.சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. விழாவிற்கு சமூக செயற்பாட்டாளர் முத்தால், பள்ளி மேலாண்மைக் குழு தலைவி கலைமணி மற்றும் பள்ளி மேலாண்மைக் குழு கல்வியாளர் ஜெய்சிங் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளியின் முன்னாள் மாணவரும் மருத்துவருமான பெரியசாமி மற்றும் முத்தால் 10, 11, 12 ஆம் வகுப்பில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினர்.

மருத்துவர் பெரியசாமி தனது உரையில்,"மாணவர்கள் ஆசிரியர்களை மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அவர்களோடு நல் உறவுகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதன் மூலம் நல்ல மதிப்பெண்கள் பெறுவதோடு, நல்ல ஒழுக்கமுள்ள மாணவர்களாக உயர்ந்து, பள்ளிக்கு பெருமைத் தேடித் தர வேண்டும் என்று மாணவர்களைக் கேட்டுக் கொண்டார்.

விழாவின் சிறப்பு விருந்தினராக கவிஞர், பட்டிமன்ற உரையாளர், ஆலங்குடி வெள்ளைச்சாமி கலந்து கொண்டு உரையாற்றினார். அவர் தனது உரையில், "மாணவர்கள் ஒவ்வொரு நாளையும் பயனுள்ள நாளாக செலவழிக்க வேண்டும். இணையதளம் மாணவர்களை படிப்பிலிருக்கும் கவனத்தை சிதறடிக்கும் வகையில் உள்ளது. ஆகவே இணைய தளத்தை பயன்படுத்துவதைக் குறைத்து படிப்பில் கவனம் செலுத்த வேண்டும். அதுவே உங்களது வாழ்வைச் செம்மையாக்கும் என்று மாணவர்களுடன் கலகலப்பாக உரையாடினார்.

பள்ளி ஆண்டறிக்கையினை பட்டதாரி ஆசிரியர் இன்பராஜ் வாசித்தார். மாணவர்களது கலை நிகழ்ச்சிகள் மற்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டினை அனைத்து ஆசிரியர் பெருமக்களும் சிறப்பாகச் செய்திருந்தனர். விழா முடிவில் முதுகலை ஆசிரியர் பிரபு வந்திருந்த அனைவருக்கும் நன்றி கூறினார். விழாவிற்கு வந்திருந்த மாணவர்கள் உள்ளிட்ட ஆசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள் அனைவருக்கும் அறிவியல் ஆசிரியர்

வெங்கடசுப்பிரமணியன் இனிப்புகள் வழங்கி வாழ்த்து கூறினார். விழா நிகழ்வுகளை பள்ளியின் அனைத்து ஆசிரியர்களும், அலுவலகப்பணியாளர்களும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

# ஈரோடு மாவட்டத்தில் 5 திருக்கோயில்களில் ரூ.4.76 கோடி மதிப்பீட்டிலான திருப்பணிகளுக்கு அமைச்சர் சேகர்பாபு அடிக்கல் நாட்டினர்



சென்னை : பிப். 10–

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் நேற்று ஈரோடு மாவட்டம், திண்டல் அருள்மிகு வேலாயுத சுவாமி திருக்கோயில் வளாகத்தில். 2023-2024 ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்ற அறிவிப்புகளை நிறைவேற்றிடும் வகையில் ஈரோடு மாவட்டத்தில் 5 திருக்கோயில்களில் ரூ. 4.76 கோடி மதிப்பீட்டிலான 6 திருப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, கட்டுமானப் பணிகளைத் தொடங்கி வைத்தனர்.

இந்து சமய அறநிலையத்துறை, தனது நிர்வாகக் கட்டுப்பாட்டில் உள்ள தொன்மையான திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளுதல், குடமுழுக்குகள் நடத்துதல், புதிய இராஜகோபுரங்களை கட்டுதல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை புனரமைத்தல், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், திருக்கோயில் சொத்துகளை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல் போன்ற பல்வேறு பணிகளை செம்மையாக மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் நேற்று ஈரோடு மாவட்டம், திண்டல் அருள்மிகு வேலாயுத சுவாமி திருக்கோயில் வளாகத்தில் அத்திருக்கோயிலுக்கு ரூ.2.11 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் புதிய ஐந்து நிலை இராஜகோபுரம், சென்னிமலை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ.93 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ள பசுமடம், தங்கமேடு, அருள்மிகு தம்பிக்கலை அய்யன் சுவாமி திருக்கோயிலில் ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும் வணிக வளாகம், பவானி அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.51 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும் யானை மணிமண்டபம் மற்றும் ரூ.34.50 இலட்சம் மதிப்பீட்டிலான பணியாளர் குடியிருப்பு மராமத்துப் பணிகள், அந்தியூர், அருள்மிகு செல்லீஸ்வரர் திருக்கோயிலில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் திருமதில் சுவர் கட்டும் பணி என மொத்தம் 5 திருக்கோயில்களில் ரூ.4.76 கோடி மதிப்பீட்டிலான 6 திருப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, கட்டுமானப் பணிகளைத் தொடங்கி வைத்தனர்.

இப்பணிகளில் ரூ.2.11 கோடி மதிப்பீட்டிலான பணி உபயதாரர் நிதியின் மூலமாகவும், ரூ.2.65 கோடி மதிப்பீட்டிலான பணிகள் அந்தந்த திருக்கோயில் நிதியின் மூலமாகவும் மேற்கொள்ளப் படுகின்றன.

இந்நிகழ்ச்சியில் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஜி. வெங்கடாசலம், டாக்டர் சி.சரஸ்வதி, ஈரோடு மாநகராட்சி மேயர் சு.நாகரத்தினம், ஈரோடு மண்டல இணை ஆணையர் அ.தி. பரஞ்சோதி, துணை ஆணையர் இரா.மேனகா, மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் சிவக்குமார், உதவி ஆணையர்கள் சாமிநாதன், மொ.அன்னக்கொடி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



▶ திருவரங்குளம் அருகே உள்ள பிரசித்தி பெற்ற பொற்பனைக்கோட்டை முனீஸ்வரர் கோவிலில் தை அமாவாசையை முன்னிட்டு பொற்பனை முனீஸ்வரருக்கு பால், தயிர், சந்தனம் உள்ளிட்ட ஒன்பது வகையான அபிஷேக ஆராதனைகளுடன், சிறப்பு வழிபாடு நடைபெற்றது. அதைபோல் பூந்தோட்டம் ஏழுமுககாளியம்மனுக்கு சிறப்பு வழிபாடு நடைபெற்று பக்தர்களுக்கு அருள் அளித்தார்.



▶ தென்காசி மாவட்டம், சொக்கம்பட்டி மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ள கருப்பாநதி அணைக்கட்டு அருகே அருள்மிகு பெரியசாமி, சிவகாமி அம்பாள் திருக்கோவிலின் முன்பாக ஆற்றில் லட்சக்கணக்கான பொதுமக்கள் நீராடி தை மாத அம்மாவாசை தினத்தில் முன்னோர்களை நினைத்து எள், மாவு பிண்டத்தை ஆற்றில் கரைத்து தர்ப்பணம் செய்து வழிபட்டனர். இந்நிகழ்வு தாமிரபரணி கரையோரம், பாபநாசம், குற்றாலம், மணிமுத்தாறு போன்ற நீர்நிலைகளில் இந்துக்கள் மூதாதையர்களை நினைத்து தர்ப்பணம் செய்து வழிபட்டனர்.

### கிழக்கு கடற்கரை சாலையில்

# முறையாக அனுமதி இல்லாமல் செயல்படும் இறால் கம்பெனிகளை மூடவேண்டும் – பொதுமக்கள் கோரிக்கை



ஆவுடையார்கோவில் : பிப். 10–

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் தாலுகாவில் உள்ள திருப்புனவாசல் காவல் சரகத்தில் உள்ள ஏனாதி கிராமத்தில், கிழக்கு கடற்கரை சாலையில் அமைந்துள்ள பொதுமக்கள் பயன்படுத்தும் குடிதண்ணீர் குளத்தில் இறால் கம்பெனியில் உள்ள கழிவு பொருட்களான நண்டு ஓடு, இறால் ஓடு. கணவாய் ஓடு, போன்ற கழிவு பொருட்களை 300 குடும்பங்கள் வாழும் ஏனாதி குளத்தில் இரவோடு இரவாக இறால் கம்பெனி நடத்தும் சமூக விரோதிகள் குளத்தில் கொட்டி சென்றுவிட்டனர்.

இதனால் பல தொற்று நோய்கள் இதிலிருந்து உருவாகும் என்று பொதுமக்கள் அச்சத்துடன் உள்ளனர். இந்த தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து வட்டாட்சியரிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். உடனடியாக இந்த கழிவு பொருட்களை அப்புறப்படுத்தி விடுகிறேன் என்று கூறிய பின்னர், ஜேசிபி இயந்திர மூலம் கழிவு பொருட்களை அப்புறப்படுத்தினர். இருந்தாலும் இதன் பின்பு எதுவும் தொற்று நோய் உண்டாகுமோ என்ற அச்சத்தில் பொதுமக்கள் உள்ளனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கிழக்கு கடற்கரை சாலையில் இயங்கும் முறையாக அனுமதி இல்லாமல் செயல்படும் இறால் கம்பெனிகளை ஆய்வு செய்து சீல் வைக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைக்கின்றனர்.

# 'நான் முதல்வன்' திட்டத்தின் பலன் முதல்வர் ஸ்டாலின் மகிழ்ச்சிப் பகிர்வு

சென்னை : பிப். 10-

'நான் முதல்வன்' திட்டத்தின் பயனாக கல்லூரி மாணவ, மாணவியர்கள் வேலைவாய்ப்பு பெற்று வருவது மனநிறைவு அளிப்பதாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.



இது தொடர்பாக தமிழகமுதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில், 'மனநிறைவு தரும் செய்தி. இந்த வெற்றிப் பயணம் தொடரும். தலைமுறைகள் பல முன்னேற்றம் காண முதல் தலைமுறைப் பட்டதாரிகள் அனைவரும் நல்ல வேலைக்குச் செல்ல வேண்டும் என்பதே நமது திராவிட மாடல் அரசின் நோக்கம். நமது திட்டங்களால் அந்த நோக்கத்தை நிறைவேற்றுவோம்' என்று அவர் பதிவிட்டுள்ளார்.

நான்குமாவட்டங்களில் இருந்து கலை – அறிவியல் கல்லூரிகளில் பயிலும் ஆயிரக்கணக்கான இறுதி ஆண்டு மாணவர்களுக்கு 'நான் முதல்வன்' திட்டம் மூலமாக வேலை வாய்ப்பு கிடைத்துள்ள செய்தியைப் பகிர்ந்து முதல்வர் ஸ்டாலின் தனது மகிழ்ச்சியைப் பதிவு செய்துள்ளார்.

### சட்டமன்றத்தில் அறிவித்தது போல விவசாயிகளின் கூட்டுறவு கடன்களை

# தள்ளுபடி செய்யக்கோரி காரைக்காலில் காங்கிரஸ் கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டம்

காரைக்கால், பிப். 10-

புதுச்சேரி ஆளும் என். ஆர் பி.ஜே.பி கூட்டணி அரசு ஆட்சி அமைத்த போது சட்டமன்றத்தில் 27.03.2021 அன்று முதல் சட்டப்பேரவை கூட்டத் தொடரில் புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி விவசாய கூட்டுறவு கடன்கள் முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படும் என அறிவித்தார்.




இரண்டரை ஆண்டு காலம் கடந்த பிறகும் இதுவரை அது குறித்த எந்த அரசாணையும் வெளியிடப்படாததால் விவசாயிகள் மீண்டும் கடன் பெற முடியாத சூழ்நிலை உள்ளது. இதனால் விவசாயிகள் பெரும் இன்னல்களை சந்தித்து வருகின்றனர். இதனை கண்டித்து மாநில முழுவதும் உள்ள விவசாயிகள் பல்வேறு போராட்டங்களை நடத்தி அரசுக்கு அழுத்தம் கொடுத்த நிலையிலும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததை கண்டித்தும், சட்டமன்றத்தில் அறிவித்தது போல விவசாயிகளுக்கான கூட்டுறவு கடனை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க கோரியும் அகில இந்திய காங்கிரஸ் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்டத் தலைவர் சந்திரமோகன் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி, முன்னாள் மாநில தலைவர் ஏ.வி. சுப்பிரமணியன், முன்னாள் அமைச்சர் கமலக்கண்ணன், சட்டமன்ற காங்கிரஸ் கட்சி தலைவர் வைத்தியநாதன், இளைஞர் காங்கிரஸ் தலைவர் ரஞ்சித் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டோர் நேருநகர் கடைவீதியில் இருந்து ஊர்வலமாக வந்து அரசு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி எதிரே கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது கூட்டுறவு கடனை தள்ளுபடி செய்யாத புதுச்சேரி அரசை கண்டித்து கண்டனம் முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தால் அங்கு பரபரப்பு நிலவியது.

# சிபிஎம் அரசியல் விளக்கப் பொதுக்கூட்டம்

புதுக்கோட்டை : பிப். 10-

புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் ஒன்றிய மார்ச்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கட்சியின் வளர்ச்சி நிதியளிப்பு, அரசியல் விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.



அரிமளம் எட்டாம் மண்டகப்படியில் நடைபெற்ற கூட்டத்திற்கு ஒன்றியச் செயலாளர் ஆர். வி.ராமையா தலைமை வகித்தார். பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் மதுக்கூர் ராமலிங்கம் சிறப்புரையாற்றினார்.

அவரிடம் கட்சியின் வளர்ச்சி நிதியாக ரூ.1,50,100 வழங்கப்பட்டது. மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் எஸ்.சங்கர், ஜி.நாகராஜன், எஸ். ஜனார்த்தனன், மாவட்டக்குழு உறுப்பினர் கே.முகமதலிஜின்னா உள்ளிட்டோர் பேசினர். முன்னதாக ஒன்றியக்குழு உறுப்பினர் எம்.அடைக்கப்பன் வரவேற்க, ஒன்றியக்குழு உறுப்பினர் ஏ.மணி நன்றி கூறினார்.

# வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கை

நாகர்கோவில் : பிப். 10-

தோரகல்புதூரில் திராவிட முன்னேற்ற கழகத்தின் தேர்தல் அறிக்கை குழு தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி தலைமையில் பொதுமக்களின் கோரிக்கை மனு பெறப்பட்டது.



வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையின் சார்பாக சிவகிரி மாநில மருத்துவர் அணி துணை அமைப்பாளர் எஸ்.எஸ். செண்பகவிநாயகம் கோரிக்கை மனு அளித்தார். அதில் கேரள மாநிலத்தில் விணாக கலக்கும் செண்பகவல்லி அணையின் உடைந்த பகுதியை சரி செய்தால் தென்காசி, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய 5 மாவட்டங்களும் தண்ணீர் பஞ்சம் நீங்கி செழிப்படையும், மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என அறிவித்த முத்தமிழ் அறிஞர் கலைஞரின் கனவை நினைவாக்க தென்காசியில் ஒரு மருத்துவக் கல்லூரி அமைய வேண்டும், 5 மாவட்ட விவசாயிகளின் கரும்பு பயிர் சாகுபடி செய்த நிலையில் தரணி சர்க்கரை ஆலையில் 99 கோடி நிலுவை பாக்கித் தொகையை பெற்று தர வேண்டியும், தரணி சர்க்கரை ஆலையை நம்பி 2000 தொழிலாளர்கள் வேலை இன்றி தவிக்கும் நிலையில் மூடி கிடக்கும் சர்க்கரை ஆலை தமிழக அரசே திறக்க வேண்டும்.

தென்காசி மாவட்டத்தில் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு, தொழிற்சாலைகள் அமைத்து தர வேண்டியும், வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதி விவசாய கூலி தொழிலாளர்கள் நிறைந்த பகுதியாகும், மேல்படிப்பு படிக்கும் மாணவர்கள் பிற மாவட்டங்களுக்கு செல்ல வேண்டி இருப்பதால் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்து தர வேண்டியும், சிவகிரி பேரூராட்சி பகுதியில் பொது நூலகம் வாடகை கட்டிடத்தில் இயங்கி வருவதால் அரசு நிலத்தில் சொந்த கட்டிடம் கட்டித் தரவும், சிவகிரியில் தலைமை மருத்துவமனையில் அனைத்து வசதிகளுடன் தரம் உயர்த்தி காது, மூக்கு, தொண்டை, எலும்பு முறிவு, மகப்பேறு, குழந்தைகள் நல மருத்துவம், தீக்காய தீவிர சிகிச்சை பிரிவு போன்ற அனைத்து வசதிகளும் நிறைந்த மருத்துவமனை அமைத்து தர வேண்டியும், காட்டு யானை, காட்டுப்பன்றிகளால் ஏற்படும் பயிர் சேதத்தை உடனடி நிவாரணம் வழங்க வேண்டியும், வன விலங்குகளில் இருந்து காட்டுப்பன்றியை விலங்குகளின் பட்டியலில் இருந்து நீக்கிடவும், சோலார் மின் வேலி அமைத்து தர வேண்டியும், காட்டு விலங்குகளுக்கு பெரிய அகழிகள் அமைத்து கண்காணிப்பு கோபுரம் ஏற்படுத்தி கொடுக்க வேண்டியும், வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் குலாளர் மற்றும் பிற மக்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்த நாட்டு செங்கல் சூளைகள் நடத்திட அரசு அனுமதி வழங்கிட வேண்டியும் கோரிக்கை மனு வழங்கப்பட்டது.

இதில் தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வே.ஜெயபாலன், பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ், டெல்லி தமிழக சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், அரசு தலைமை கொறடா கோவி. செழியன், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் எழிலன், தென்காசி மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் மணிகண்டன், குற்றாலம் சுரேஷ், மாவட்ட பொருளாளர் ஷெரிப் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் மாநில மருத்துவ அணி துணை அமைப்பாளர் எஸ். எஸ்.செண்பக விநாயகம், கனிமொழி கருணாநிதியிடம் பொது மக்களின் கோரிக்கை மனுவை வழங்கினார்.



▶ செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட திருப்போரூர் ஒன்றியம் கேளம்பாக்கம் ஊராட்சியில் புதிய சாலை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார்கள். இதனை அடுத்து திருப்போரூர் சட்டமன்றத் தொகுதிக்கு மேம்பாட்டு நிதியில் புதிய நியாயவிலைக் கடை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர் . காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கட்சி செயலாளர் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மேற்பார்வையில் திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் பாலாஜி திருப்போரூர் ஒன்றிய பெருந்தலைவர் திருப்போரூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருப்போரூர் வடக்கு ஒன்றிய கட்சி செயலாளர் ,முன்னாள் எம்.எல்.ஏ இதயவர்மன் தலைமை செயற்குழு உறுப்பினர் அன்புசெழியன் இன் நிகழ்ச்சியில் சட்டமன்ற தொகுதி தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர் எல்லப்பன் , ஒன்றிய குழு உறுப்பினர் திவ்யாவினோத்கண்ணன் , ஊராட்சி மன்ற தலைவர் ராணிஎல்லப்பன் , ஊராட்சி மன்ற துணை தலைவர் , வார்டு உறுப்பினர்கள், கட்சி கிளை கட்சி செயலாளர்கள் பாளையம் , அன்பு, அசுந்தன் , ராஜா, பிரபு கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



▶ ,அண்ணா நகர் உட்கோட்டம், திருமங்கலம் சரகத்திற்குட்பட்ட எஸ்.பி.ஓ எ பள்ளி வளாகத்தில், வடக்கு மாவட்ட துணை ஆணையர் குமார் அவர்களின் மேற்பார்வையில் அண்ணா நகர் உட்கோட்ட உதவி ஆணையர் சுந்தர்ராஜ் அவர்கள் தலைமையில் வி,1 வில்லிவாக்கம் போக்குவரத்து காவல் நிலைய உதவி ஆய்வாளர் வின்ஸ் கிருபராஜ் அவர்கள் முன்னிலையில் 35 வது தேசிய சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நடைபெற்றது. இவ்விழாவில் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்



▶ இந்தியா தனது 75-ஆவது குடியரசு தின விழாவை ஜனவரி -26.2024-இல் கொண்டாடப்பட்ட நிலையில் இதில் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் சார்பில் அணிவகுப்பில் கலந்து கொள்வதற்கு நாட்டின் 28-மாநிலங்கள் மற்றும் 8-யூனியன் பிரதேசங்களில் இருந்து 2, 274 கேடட்கள், ஒரு மாத கால பயிற்சி நடைபெற்று பயிற்சி முடித்து குடியரசு தின விழா 2024-இல் பங்கு பெற்றனர். இந்த ஆண்டு அணிவகுப்பில் பெண்கள் அதிகமானோர் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. புதுச்சேரி மாநிலத்தில் இருந்து 3 பெண் மாணவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். இதில் காரைக்கால் அவ்வையார் அரசு கலைக் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படிக்கும் எஸ். திவ்யபாரதி மற்றும் அரசு மகளிர் தொழில்.நுட்பக் கல்லூரியை சேர்த்த இரண்டாம் ஆண்டு படிக்கும் மாணவி கே.அகல்யா ஆகியோர் காரைக்கால் மாவட்டம் சார்பாக கலந்து கொண்டனர். இது புதுச்சேரி மாநிலத்திற்கும் காரைக்கால் மாவட்டத்திற்கும் பெருமை சேர்ப்பதாகவும், சிறப்புடையதாகவும் அமைந்தன. இதன் ஒரு தொடர் நிகழ்வாக இந்திய குடியரசு தின விழாவில் கலந்து கொண்ட இரு மாணவிகள் நேற்று காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் சந்தித்து வாழ்த்து பெற்றார்கள். மேலும் ஆட்சியர் அவர்கள் பங்கு பெற்ற மாணவிகளுக்கு பாராட்டு தெரிவித்தார்கள், மேலும் நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் தாம்பரம் உள்ளிட்ட அவர்கள் சார்ந்த குழுவினரையும் பாராட்டினார்கள்.



▶ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தொழிலாளர் நலத்துறையின் மூலம் கொத்தடிமை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக நேற்று மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா தலைமையில் அனைத்து துறை அலுவலர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.



▶ காரைக்கால் அரசு மருத்துவமனையில் உள்ள மார்பக நோய் சிகிச்சை பிரிவில் மூச்சுக்குழாய் அகநோக்கி (Bronchoscopy) செய்யும் வசதியினை நேற்று மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் துவக்கி வைக்கப்பட்டது. உடன் மருத்துவமனை கண்காளிப்பாளர் மருத்துவகண்காணிப்பாளர் கண்ணகி, ஜிப்மர் காரைக்கால் மருத்துவமனையின் டீன் டாக்டர். குஷ்குமார் ஸாஹா உள்ளிருப்பு மருத்துவர் பார்த்திப விஜயன் முன்னிலையில் நடைபெற்றது.



▶ செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கருங்குழி பேரூராட்சி 6-வது வார்டு பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான கருங்குழி பேரூராட்சி 6-வது வார்டு பகுதியில் பகுதிநேர நியாயவிலை கடை கட்டிடம் அமைத்து தர வேண்டி மதுராந்தகம் சட்ட மன்ற உறுப்பினரிடம் மனு அளித்திருந்தனர். இதனை தொடர்ந்து மகளிர் அணி இணை செயலாளர் , செயற்குழு உறுப்பினர், மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேலிடம், அரியானூர் கிராம பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் அப்பகுதியில் பேருந்து நிழற்குடை அமைக்க மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து சுமார் 6 லட்சம் நிதி ஒதுக்கி அதற்கான பூமி பூஜை நடைபெற்றது. இதனை அடுத்து, தனது தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ₹9.13 லட்சம் நிதி ஒதுக்கி கருங்குழி பேரூராட்சி 6-வது வார்டு பகுதியில் பகுதிநேர நியாயவிலை கடை கட்டிடம் அமைக்கும் பணி மேற்கொள்ள அதற்கான 6-வது வார்டு உறுப்பினர் எம்.ஜி.ஆர்.ஹாரி ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் , கருங்குழி பேரூராட்சி கட்சி செயலாளர் ஜெயராஜ் , மதுராந்தகம் வடக்கு ஒன்றிய செயலாளர் குமரன் ஆகியோர் அடிகல்நட்டு துவங்கி வைத்தனர். இந்நிகழ்வின் போது.வார்டு உறுப்பினர்கள், பேரூர் கிளைக் கட்சி நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள், கட்சி உடன்பிறப்புகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# தில்லையாடி வள்ளியம்மை அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி

தரங்கம்பாடி, பிப். 10-

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுகா செம்பனார்கோவில் ஒன்றியத்துக்கு உட்பட்ட தில்லையாடி ஊராட்சியிள் உள்ள தியாகி வள்ளியம்மை அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறை சார்பில் மாணவ மாணவிகளுக்கு விலை இல்லா இருசக்கர மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.



இதில் சட்டமன்ற உறுப்பினரும் மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் கலந்து கொண்டு பள்ளிமாணவமாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கி உரையாற்றினார்.. நிகழ்ச்சியில் ஒன்றிய குழு பெருந்தலைவர் நந்தினி ஸ்ரீதர், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் ராபியா நர்கீஸ்பானு அப்துல் மாலிக், ஒன்றிய குழு துணை தலைவர் பாஸ்கர், ஊராட்சி மன்ற தலைவர்கள் ரங்கராஜன், கே.பி.ராஜா என்கிற நாகராஜன், சுவாமிநாதன், ஒன்றிய குழு உறுப்பினர் ஜெயந்தி கார்த்திக், பள்ளியின் தலைமை ஆசிரியர் எம்.கோபாலகிருஷ்ணன், தரங்கை பேரூர் திமுக செயலாளர் முத்துராஜா, ஓய்வு பெற்ற ஆசிரியர் ஜெகதீசன், மற்றும் திமுக நிர்வாகிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பள்ளி மாணவ மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

# காரைக்காலில் விளையாடி கொண்டிருந்த இரண்டு வயது பெண் குழந்தை குளியலறை பக்கெட்டில் விழுந்து உயிரிழந்தார்

காரைக்கால், பிப். 10-

காரைக்கால் மாவட்டத்தில் உள்ள எம்.எம்.ஜி நகரை சேர்ந்த கமலக்கண்ணன். இவர் ஆன்லைன் டெலிவரி கம்பெனியில் மேலாளராக பணியாற்றி வருகிறார். இவரது மனைவி ரேவதி. இவர்களுக்கு இரண்டு வயது ஸ்ரீநிதி என்கின்ற பெண் குழந்தை உள்ளது.

இந்த நிலையில் தாய் ரேவதி வீட்டு வேலை செய்து கொண்டு வந்த போது மகன் ஸ்ரீநிதி வீட்டில் விளையாடிக் கொண்டிருந்தபோதுதிடீரென்று ஸ்ரீநிதி காணவில்லை தாய் ரேவதி உடனடியாக ஸ்ரீநிதியை பல இடங்களில் தேடியும் கிடைக்காததால் வீட்டு குளியலறையில் பார்த்த போது அங்கிருந்த பிளாஸ்டிக் பக்கெட்டில் ஸ்ரீநிதி தலைகிழாக தண்ணீரில் மூழ்கி கிடந்ததை கண்டு தாய் ரேவதி அதிர்ச்சி அடைந்தார்.

இதனை அடுத்து ஸ்ரீநிதியை காரைக்கால் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு குழந்தையை பரிசோதித்த மருத்துவர்கள் குழந்தை ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்துள்ளார். தொடர்ந்து இது குறித்து காரைக்கால் நகர காவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# செவல்குளம் கூட்டுறவு தொடக்க வேளாண்மை சங்கம் சார்பில் சுய உதவி குழுக்களுக்கு கடன் வழங்கும் நிகழ்ச்சி

சங்கரன்கோவில் : பிப். 10-

குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம், செவல்குளம் ஊராட்சி, செவல்குளம் கூட்டுறவு தொடக்க வேளாண்மை கடன் சங்கம் மூலம் 12 -மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கடன் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.



நிகழ்ச்சிக்கு திருநெல்வேலி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இணை பதிவாளர் உமா மகேஸ்வரி, தென்காசி மண்டல கூட்டுறவு சங்கங்கள் இணை பதிவாளர் நரசிம்மன் தலைமை வகித்தனர். குருவிகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் கடற்கரை முன்னிலை வகித்தார். கள மேலாளர் ஜெயராம் வரவேற்றார். இந்நிகழ்ச்சியில், திமுக தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்துகொண்டு மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கூட்டுறவு சங்கம் மூலம் கடன்களை வழங்கினார்.

ஒன்றிய செயலாளர்கள் சேர்மத்துரை, கிறிஸ்டோபர், வக்கீல் அணி பிரபாகரன், நெசவாளர் அணி குமார் சங்கர், விவசாய அணி சேர்மன் பாலசுப்பிரமணியன், கூட்டுறவு சங்கசெயலாட்சியர் விஜயகுமார், சரக மேற்பார்வையாளர்கள் ரவிக்குமரன், ஆறுமுகவேல், கண்ணன், சங்க செயலாளர் மீனாட்சி, திமுக ஒன்றிய துணைச் செயலாளர் மாடசாமி, கவுன்சிலர் மணிமேகலை, கிளைச் செயலாளர்கள் கார்த்திக் ராஜ், முத்துராஜ், மாடசாமி, திமுக இளைஞர் அணி பாலமுருகன் மகேந்திரன், முருகன், ஜலால், ஜெயக்குமார், செந்தில் மற்றும் சங்க பணியாளர்கள், மகளிர் சுய உதவி குழுவினர் கலந்து கொண்டனர். முடிவில் குருவிகுளம் தெற்கு ஒன்றிய திமுக இளைஞரணி குட்டி நன்றி கூறினார்.

# உத்தரகாண்ட் மாநிலத்தில் மதராஸா இடிக்கப்பட்டதை தொடர்ந்து ஏற்பட்ட வன்முறையில் 4 பேர் பலி : ஊரடங்கு உத்தரவு அமல்

உத்தரகாண்ட் : பிப். 10-

உத்தரகாண்ட் மாநிலம் ஹல்தாவணி பகுதியில் கலவரம் காரணமாக பதற்றம் நீடிப்பதால் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டுள்ளது.

ஹல்தாவணி பகுதியில் மதரஸாவை இடிக்க முயன்றபோது போராட்டக்காரர்கள் – போலீசார் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. போலீஸ்காரர்கள் மீது போராட்டக்காரர்கள் கற்களை வீசியதால் வன்முறை மூண்டது; 150-க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். ஹல்தாவணி பகுதியில் பதற்றம் நீடிப்பதை அடுத்து உத்தரகாண்ட் அரசு ஊரடங்கு உத்தரவை அமல்படுத்தியது.

உத்தரகாண்ட் மாநிலம் ஹல்ட்வானியில் உள்ள வான்புல்புரா பகுதியில் சட்ட விரோதமாக மதரஸா கட்டப்பட்டு இருந்ததாக கூறப்படுகிறது. இதனால், நகராட்சி அதிகாரிகள் அந்த கட்டிடத்தை இடிக்க முடிவு செய்து அதிகாரிகள் போலீஸ் பாதுகாப்புடன் கட்டிடங்களை இடிக்க சென்றனர். கட்டிடங்களை இடிப்பதற்கு அப்பகுதியில் வசிக்கும் மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இருப்பினும், நீதிமன்ற உத்தரவு என்று கூறி அதிகாரிகள் இடிக்கும் பணியை தொடங்கினர்.

இதனை அடுத்து அப்பகுதியில் உள்ள சிலர், அதிகாரிகள் மீது கற்களை வீசி தாக்குதல் நடத்தியதாக கூறப்படுகிறது. இதில் அதிகாரிகள் சிலர் காயம் அடைந்தனர். இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டது. இதனை தொடர்ந்து, நிலமையை கட்டுக்குள் கொண்டு வர போலீசார் கண்ணீர் புகை குண்டுகளை வீசினர். தொடந்து அந்த கும்பல் போலீஸ் வாகனங்களுக்கும் தீ வைத்தது. இந்த வன்முறையில் 4 பேர் உயிரிழந்துள்ளனர். 250-பேர் காயம் அடைந்துள்ளனர்.

ஹல்ட்வானியில் கலவர சூழல் நிலவுவதால் அங்கு (144) ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டுள்ளது. கலவரக்காரர்களை கண்டதும் சுட மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. ஹல்ட்வானி, நைனிடால் மாவட்டம் முழுவதும் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. உத்தரகாண்டின் பதற்றமான பகுதிகளில் இணைய சேவை முடக்கப்பட்டுள்ளது. இதனிடையே, உத்தரகாண்ட் மாநில முதல்வர் புஷ்கர் சிங் தாமி, அதிகாரிகளுடன் அவசர ஆலோசனை மேற்கொண்டார். தொடர்ந்து சட்டத்தை கையில் எடுப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும் போலீசாருக்கு உத்தரவிட்டார்.

இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட

# தமிழ்நாட்டு மீனவர்கள், படகுகளை விடுவிக்கக் கோரி பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம்



சென்னை : பிப். 10-

இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட தமிழ்நாட்டு மீனவர்கள், படகுகளை விடுவிக்கக் கோரி பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் அனுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, இலங்கை அரசால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டு மீனவர்கள் மற்றும் அவர்களது மீன்பிடி படகுகளை விடுவித்திடவும், மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண கூட்டு நடவடிக்கைக் குழுவினைப் புதுப்பித்திடவும் உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டு, பிரதமர் நரேந்திர மோடிக்கு முதலமைச்சர்.மு.க.ஸ்டாலின் கடிதம் அனுப்பியுள்ளார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்பட்டு வரும் நிலையில், தமிழ்நாட்டு மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடவும், அவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாத்திடவும் உரிய தூதரக வழிமுறைகளைப் பின்பற்றி விரைவான, தீர்க்கமான நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி முதலமைச்சர். மு.க.ஸ்டாலின், இந்தியப் பிரதமர்.நரேந்திர மோடி அவர்களுக்கு நேற்று கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில், இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர்கள் கைது மற்றும் மீன்பிடிப் படகுகள் பறிமுதல் செய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதையும், இதனால் பல தலைமுறைகளாக இந்த மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் தமிழ்நாட்டு மீனவர்களின் வாழ்வாதார உரிமைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கோவிட் 19 பெருந்தொற்று காலத்தைத் தவிர்த்து, கடந்த சில ஆண்டுகளில் இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர்கள் கைது செய்யப்படுவது கணிசமாக அதிகரித்துள்ளதை குறிப்பிட்டுள்ள முதலமைச்சர், பாரம்பரியமாக தமிழ்நாடு மீனவர்கள் பயன்படுத்தி வரும் மீன்பிடிப் பகுதிகள் இலங்கைக் கடற்படையினரால் கட்டுப்படுத்தப்படுவதையும், இதனால் மீனவர்களின் வாழ்வாதாரமும், பொருளாதாரமும் பெருமளவில் பாதித்துள்ளதோடு, மீன்பிடித் தொழிலையே நம்பியுள்ள அவர்களின் கலாச்சார மற்றும் சமூகக் கட்டமைப்பிற்கு பெருத்த அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதையும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

2023 ஆண்டில், இலங்கைக் கடற்படையினர் 243 மீனவர்களை கைது செய்துள்ளதுடன், 37 படகுகளையும் பறிமுதல் செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர், கடந்த 28 நாட்களில் மட்டும், 6 சம்பவங்களில், 88 மீனவர்கள் கைது செய்யப்பட்டு, 12 மீன்பிடி படகுகள் சிறைபிடிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்படிப்பட்ட பதற்றமான சூழ்நிலையில், மீன்பிடிக்கச் செல்லும் தமிழ்நாடு மீனவர்கள் மீது அடையாளம் தெரியாத நபர்களால் நடத்தப்படும் தாக்குதல்கள், மீனவர்களின் படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களுக்கு ஏற்படுத்தும் சேதங்கள் கவலையை மேலும் அதிகரித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ள தமிழ்நாடு முதலமைச்சர், இதுபோன்ற செயல்கள் மீனவர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிப்பதுடன், மீனவர்களுக்கு பொருளாதார பாதிப்புகளை மேலும் அதிகரித்துள்ளதையும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளை நாட்டுடைமையாக்கிட இலங்கை அரசாங்கத்திற்கு அதிகாரமளிக்கும் வகையில், 2018 ம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தினால் கடல்சார் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் தொடர்பாக, முன்னரே தான் எழுதியிருந்த கடிதத்தில் சுட்டிக்காட்டியிருந்ததை குறிப்பிட்டுள்ள முதலமைச்சர், இலங்கை அரசின் இந்த நடவடிக்கையால், நல்ல நிலையில் உள்ள பறிமுதல் செய்யப்பட்ட தமிழ்நாட்டு மீனவர்களின் மீன்பிடிப் படகுகளை மீட்டு, தமிழ்நாட்டிற்குக் கொண்டு வர முடியவில்லை என வேதனையோடு தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பல மீனவர்கள் தங்கள் வாழ்நாள் சேமிப்பைக் கொண்டு, தங்களது வர்த்தகத்திற்கு இன்றியமையாத படகுகளை வாங்குவதற்கும், அவற்றைப் பராமரிப்பதற்கும் முதலீடு செய்துள்ளதையும், முறையான இழப்பீடு அல்லது மாற்று ஏற்பாடுகள் ஏதுமில்லாமல், படகுகள் இதுபோன்று நாட்டுடைமையாக்கப்படுவது, மீனவர்களையும், அவர்களது குடும்பங்களையும் நிதி நெருக்கடியில் தள்ளியுள்ளதையும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். எனவே, பறிமுதல் செய்யப்பட்டு நாட்டுடைமையாக்கப்பட்டுள்ள இந்தியமீன்பிடிப்படகுகளைத் திரும்பப் பெற்றிடவும், படகுகளை உடனடியாக விடுவித்திடவும் ஏதுவாக, மேற்படி சட்டத்தில் உரிய திருத்தங்களை மேற்கொள்ள இலங்கை அரசை வலியுறுத்திட வேண்டுமென்று முதலமைச்சர் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழ்நாட்டு மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வினை உறுதி செய்திடவும், மீனவ சமூகங்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாத்திடவும் உரிய தூதரக வழிகளைப் பின்பற்றிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ள முதலமைச்சர், கூட்டு நடவடிக்கைகளின் மூலம் இது சாத்தியமாகும் என்பதால், இந்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட கூட்டு நடவடிக்கைக் குழுவினைப் புதுப்பிக்க, விரைவான மற்றும் தீர்க்கமான நடவடிக்கையை எடுக்குமாறும் தனது கடிதத்தில் பிரதமர் அவர்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கை வசம் தற்போதுள்ள 77 மீனவர்கள் மற்றும் அவர்களது 151 படகுகளை உடனடியாக விடுவித்திடத் தேவையான அனைத்து தூதரக முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ள முதலமைச்சர், 3-1-2024 அன்று பாகிஸ்தான் அதிகாரிகளால் சிறைபிடிக்கப்பட்ட தமிழ்நாட்டு மீனவர்களையும், 5-12-2023 அன்று குவைத் கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்ட நான்கு தமிழ்நாட்டு மீனவர்களையும் விடுவித்திடவும், உரிய தூதரக வழிமுறைகளைப் பின்பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பிரதமர் நரேந்திர மோடி அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார் என குறிப்பிட்டுள்ளார்.

# அவிநாசி ஆர்ப்பாட்டத்தில் இபிஎஸ் பேச்சு... முதல் பக்க தொடர்ச்சி

திட்டங்களை ஸ்டிக்கர் ஒட்டி திறப்பது திமுகவின் தற்போதைய வேலை. 3 மாவட்டங்களில் நடைபெறும் அனைத்து திட்டங்களும் அதிமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்டவை.

கோவையில் எங்கு பார்த்தாலும் பாலங்கள், நீலகிரி மாவட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கொண்டுவந்ததும் அதிமுக தான். திருப்பூரில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தனியார் மருத்துவமனைக்கு இணையாக இன்றைக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் இன்றைக்கு திருப்பூர், கோவை மாவட்டங்களில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இன்றைக்கு தொழில் நலிவடையும் சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளது. தொழில்துறையினர் தொடர்ந்து போராடி வருகிறார்கள். ஆனால் செவிடன் காதில் சங்கு ஊதுவது போல் திமுக அரசு கண்டு கொள்ளாமல் உள்ளது. இது கண்டிக்கத்தக்கது. மக்கள், தொழிலாளர்கள் படும் துன்பங்கள் மற்றும் துயரங்களுக்கு செவிசாய்க்க வேண்டும்.

அந்நிய செலவாணியை ஈட்டித்தரும் தொழில்நகரம், இன்றைக்கு மோசமாகிவிட்டது. விலைவாசி 40 சதவீதம் உயர்ந்துவிட்டது. ஸ்பெயினுக்கு சென்ற தமிழ்நாடு முதல்வர் 11 நாட்கள் தங்கியிருந்தார். ஒப்பந்தம் போடப்பட்ட 3 நிறுவனங்களும் தமிழ்நாட்டை சேர்ந்த நிறுவனங்கள். ஈரோடு, தூத்துக்குடி மற்றும் பெருந்துறை நிறுவனங்களிடம் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. ஆனால் ஸ்பெயினுக்கு செல்ல வேண்டும் என மு.க.ஸ்டாலின் இன்றைக்கு ஒரு நாடகம் போட்டுள்ளார். தொழில் முதலீட்டை ஈர்க்க செல்லவில்லை. தொழில் முதலீடு செய்ய சென்றதாக மக்கள் பேசிக்கொள்கிறார்கள். தாலிக்குதங்கம், விலையில்லா மடிக்கணினி ஆகிய திட்டங்களை முடக்கியது தான் திராவிட மாடல்.

கோவை மெட்ரோ ரயில் திட்டம் கொண்டுவர நடவடிக்கை எடுத்த அரசு அதிமுகதான். புயல், வறட்சி என இரண்டு நேரங்களில் நிவாரணம் வழங்கியது அதிமுக. குளம், குட்டை, ஏரி அனைத்தையும் சீரமைக்க குடிமராமத்து திட்டம் கொண்டுவந்தது அதிமுக அரசாங்கம் தான். விவசாயிகளுக்கு 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம், பயிர்க்கடன் தள்ளுபடி செய்தது அதிமுக. தென்னை விவசாயிகள் பாதிக்கப்பட்டபோது, மத்திய அரசிடம் குரல் கொடுத்து நியாயமான விலையை பெற்றுத்தந்தோம். ரேசன் கடையில் தேங்காய் எண்ணெய் விற்பனை செய்ய வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கையை திமுக அரசு நிறைவேற்ற வேண்டும்.

தமிழகத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கு சந்திசிரிக்கிறது. மக்களுக்கு பாதுகாப்பு இல்லை. பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. நாடாளுமன்றத் தேர்தல் வரப்போகிறது. அனைத்து குடும்ப தலைவிகளுக்கும், மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும் என திமுக தேர்தல் வாக்குறுதியில் அளித்திருந்தார். ஆனால் நிறைவேறவில்லை. 3-ல் ஒருபகுதி பெண்களுக்கு தான் உரிமைத்தொகை இன்றைக்கு தமிழ்நாட்டில் வழங்கப்பட்டுள்ளது. வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஆ.ராசா எம்.பி. போட்டியிடுவார். எம்.ஜி.ஆரை அவதூறாக பேசிய ஆ.ராசா டெபாசிட் இழக்கச் செய்து, அவருக்கு பாடம் புகட்ட வேண்டும். தமிழ்நாட்டில் 39, பாண்டிச்சேரி 1 என மொத்தம் 40 தொகுதிகளிலும் மாபெரும் வெற்றியை குவிக்க பாடுபடுவோம்" என எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

# திருப்பரங்குன்றம் சோழங்குருண ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி 82வது ஆண்டு விழா

திருப்பரங்குன்றம் : பிப். 10-

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் சோழங்குருண ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி 82வது ஆண்டு விழா நடைபெற்றது.

இதில் பள்ளி குழந்தைகள், பல்வேறு தலைவர்கள், போல் வேடம் அணிந்து, அவர்களின் சாதனைகள் குறித்து உரையாற்றினர். மேலும் கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி மற்றும் பள்ளி குழந்தைகளின் சினிமா பாடல்கள் அல்லாத கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.



இந்த நிகழ்ச்சியை பள்ளியின் தலைமை ஆசிரியர் ஸ்டெல்லா, வட்டார கல்வி மையம் காமராஜ் கலந்து கொண்டனர். மாணவ, மாணவிகளுக்கு தன்னார்வலர் ரவிச்சந்திரன் பரிசுகள் வழங்கி, மதிய உணவு ஏற்பாடு செய்திருந்தார். இந்நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற தலைவர், ஊர் பொதுமக்கள், பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# மருதம் நெல்லி கல்வி குழுமத்தின் சார்பில் சமுதாய வானொலி ஒளிபரப்பு துவக்க விழா நடைபெற்றது






தர்மபுரி: பிப்.10-

தர்மபுரி அருகே பள்ளப்பட்டியில் உள்ள மருதம் நெல்லி பாலிடெக்னிக் கல்லூரியின் ஆண்டு விழாவையொட்டி பப்ளிக் போலீஸ் என்னும் அமைப்பின் துவக்க விழாவும், மருதம் நெல்லி கல்வி குழுமத்தின் சார்பில் சமுதாய வானொலி ஒலிபரப்பின் துவக்க விழாவும் நடைபெற்றது.

மேலும் மருதம் நெல்லி கல்வி குழுமத்தின் தலைவர் கா.கோவிந்த் மற்றும் செயலாளர் காயத்ரி கோவிந்த் தலைமையில் நடைபெற்ற விழாவில் தமிழக சிலை கடத்தல் தடுப்பு பிரிவு டிஜிபி சைலேஷ் குமார் யாதவ் சிறப்பு விருந்தினராக பங்கேற்று பப்ளிக் போலீஸ் என்னும் அமைப்பினை அறிமுகம் செய்து வைத்து பேசினார்.

அப்போது அவர் பின்தங்கிய தர்மபுரி மாவட்டத்தில் அதிகரித்து வரும் குழந்தை திருமணங்கள் குறித்து கவலை தெரிவித்த அவர், காவல்துறையினர் பொதுமக்களுக்கும் கிராமப்புற மக்களுக்கும் உரிய விழிப்புணர்வினை ஏற்படுத்தி இது போன்ற சமூகத்திற்கு அவலமான குழந்தை திருமணங்களை தடுத்து நிறுத்த வேண்டுமென வலியுறுத்தி கேட்டுக்கொண்டார்.

மருதம் நெல்லி பாலிடெக்னிக் கல்லூரியின் முதல்வர் நா.மகேந்திரன், ஜெயம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் சி.பரஞ்சோதி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில் தமிழ்நாடு பப்ளிக் போலீஸ் அமைப்பின் தென் மண்டல தலைவர் டாக்டர் டி.இளங்கோவன், இலங்கை தமிழ் வானொலியில் புகழ்பெற்ற அன்பு அறிவிப்பாளர் பி.ஹெச் அப்துல் ஹமீத், பப்ளிக் போலீஸ் அமைப்பின் தர்மபுரி மாவட்ட தலைவர் மற்றும் குளோபல் அகாடமியின் நிறுவனர் ஸ்டாலின் கணேசன் தர்மபுரி நகராட்சி தலைவர் லட்சுமி நாட்டான் மாது கல்லூரி கல்வி மண்டல இணை இயக்குனர் என்.ராமலட்சுமி தர்மபுரி கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் தடங்கம் பே.சுப்பிரமணி, தர்மபுரி நகர செயலாளர் நாட்டார் மாது வணிகர் நல வாரிய உறுப்பினர் மற்றும் அனைத்து வணிகர் சங்க தலைவர் எஸ். வைத்தியலிங்கம் உள்ளிட்ட பிரமுகர்கள் விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

முன்னதாக மருதம் நெல்லி கல்வி குழுமத்தின் சார்பில் புதியதாக அறிமுகப்படுத்தப்பட்ட மருதம் நெல்லி சமுதாய வானொலியின் முதல் ஒளிபரப்பினை இலங்கை தமிழ் வானொலியில் புகழ்பெற்ற அன்பு அறிவிப்பாளர் பி ஹெச் அப்துல் ஹமீத் துவக்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார்.

அவர் தனது முதல் வாழ்த்துறையில் புதிதாக துவங்கப்பட்டுள்ள இந்த சமூக பண்பலை வானொலி நிகழ்ச்சிகள் தருமபுரி மாவட்ட மக்களின் வாழ்வில் ஒரு அங்கமாக திகழ்ந்து அவர்களின் வாழ்க்கை சுபிட்சகரமாக விளங்கிட உதவிட வேண்டும் எனவும் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள படைப்பாற்றல் மிக்க மக்களின் திறமைகளை வெளிக்கொண்டு வர உதவும் வகையில் இந்த வானொலி ஒரு களமாகவும், தளமாகவும் திகழ வேண்டும் எனவும் மாவட்ட மக்களின் பங்களிப்பு இந்த வானொலிக்கு மென்மேலும் மெருகூட்டும் வகையில் அமையும் எனவும் மருதம் நெல்லி கல்வி குழுமத்தின் சார்பில் துவங்கப்பட்டுள்ள இந்த சமுதாய பண்பலை வானொலி மென்மேலும் வளர வேண்டும் என வாழ்த்தி பேசினார்.

மருதம் டெல்லி பாலிடெக்னிக் கல்லூரியின் ஆண்டு விழாவை ஒட்டி பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.



▶ திருவரங்குளம் தீர்த்த குலமான திருக்குலகரையில் தை அமாவாசை முன்னிட்டு பொதுமக்கள் தெப்பக்குளத்தில் நீராடி புரோகிதர்களிடம் அரிசி, கீரை, காய்கறி, பழங்கள் வைத்து முன்னோர்களை வணங்கி தர்ப்பணம் கொடுத்தனர். இதேபோல் திருவுடையார்பட்டி திருமலைநாதர் திரிபுரசுந்தரி அம்மாள் கோவில் தென்புறம் அமைந்துள்ள வெள்ளாற்றில் நீராடி முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்தனர்.

# காலமானார்

புதுக்கோட்டை, பிப். 10-

புதுக்கோட்டை டவுன் வைரம்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு எதிரில் பிளாட் எண் 679ல் வசித்து வந்த காலம் சென்ற நடராஜன் பிள்ளை மகனும் லண்டனில் வசித்து வரக்கூடிய ராஜலிங்கம் அவர்களின் தந்தையாருமான புதுக்கோட்டை மாவட்ட மின்வாரியத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஏடிஓ குணசேகரன் நேற்று திடீர் உடல் நலக்குறைவு காரணமாக அவரது வீட்டில் காலமானார். இந்த செய்தி அவரது



உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்திருக்கின்றது. மறைந்த குணசேகரன் அவர்களின் இறுதி ஊர்வலம் நல்லடக்கம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்று அவரது குடும்பத்தார் தெரிவித்துள்ளனர்.

# கறம்பக்குடியில் வெறிநாய் கடித்து இரண்டு பெண்கள் உட்பட 17 பேர் மருத்துவமனையில் அனுமதி

கறம்பக்குடி, பிப். 10-

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடியில் தெருநாய்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

நாய்கள் சாலையில் செல்லும் வாகன ஓட்டிகளையும், நடந்து செல்லும் பொதுமக்களையும் துரத்தி துரத்தி கடிக்கின்றன. கறம்பக்குடி அம்புக்கோவில் முக்கம், சீனிகடை முக்கம் பகுதியில் ஏராளமான தெருநாய்கள் சுற்றித்திரிகின்றன. புதன்கிழமை இரவு அந்த பகுதியில் சுற்றித்திரிந்த நாய்க்கு திடீரென வெறி பிடித்தது. சாலையில் நடந்து செல்பவர்களை துரத்தி துரத்தி கடிக்க தொடங்கியது. ஒருவரை அடுத்து ஒருவரை விடாமல் துரத்திச்சென்று கடித்தது. இதனால் அங்கிருந்த பொதுமக்கள் அலறியடித்து கொண்டு ஓட்டம் பிடித்தனர்.



சிலர் நாயை அங்கிருந்து விரட்ட முயன்றனர். அவர்களையும் அந்த நாய் விடாமல் கடித்து குதறியது. இதில் கறம்பக்குடி இந்திரா நகர் பகுதியை சேர்ந்த பார்த்திபன், புதுப்பட்டி சரவணகுமார், தட்டா ஊரணி கௌரி, கரம்பக்காடு ஓமயல் சூரியமூர்த்தி, வெட்டன் விடுதி வினோத்குமார், புதுப்பட்டி மாரிமுத்து, ஆலங்குடி லோகநாதன், தென்னகர் கோனார்தெரு அம்பிகா, சுக்ரன்விடுதி சுரேஷ்குமார், தென்னகர் சின்னையன் உட்பட 17-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இவர்கள் அருகில் உள்ள கறம்பக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றனர். இதில் 13 பேர் மேல் சிகிச்சைக்காக புதுக்கோட்டை மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பபட்டனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை கறம்பக்குடி நகர் பகுதியில் சுற்றி திரிந்த தெருநாய்களை பிடிக்கும் பணி தொடங்கியது. முழுமையாக நெருநாய்களை பிடித்து அப்புறப்படுத்த பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஆரணி ஆங்கிலப்பள்ளியில் 5 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை: 17 வயது சிறுவன் கைது

ஊத்துக்கோட்டை, பிப்10-

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணியில் மீன் மார்க்கெட் தெருவில் ஆங்கிலப்பள்ளி ஒன்று இயங்கி வருகிறது. இந்நிலையில், இப்பள்ளியில் படிக்கும் 5 வயது சிறுமிக்கு இப்பள்ளி வேனில் கிளீனராக பணியாற்றி வரும் 17 வயது சிறுவன் நேற்று முன்தினம் பாலியல் தொல்லை செய்ததாக கூறப்படுகிறது. இதுகுறித்து அந்த சிறுமி தனது பெற்றோர்களிடம் அழுது கொண்டே நடந்த கொடுமைகள் குறித்து கூறியுள்ளார்.

இந்நிலையில், நேற்று மதியம் சிறுமியின் பெற்றோர்கள் ஆங்கிலப் பள்ளியின் தாளாளரிடம் இதுகுறித்து நியாயம் கேட்டுள்ளனர். அப்பொழுது ஏற்பட்ட வாக்குவாதத்தின் உச்சகட்டமாக சிறுமியின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் பொதுமக்கள் என ஏராளமானோர் அந்த சிறுவனை சுற்றி வளைத்து பிடித்தனர். பின்னர், ஆரணி காவல்நிலையத்துக்கு கொண்டு வந்து ஒப்படைத்தனர்.

எனவே, போலீசார் அந்த சிறுவனை ஊத்துக்கோட்டையில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையத்துக்கு கொண்டு சென்றனர். போலீஸ் இன்ஸ்பெக்டர் ஏழுமலை தலைமையில் போலீசார் இச்சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்தனர். பின்னர், அந்த சிறுவனை ஊத்துக்கோட்டை முதல் நிலை குற்றவியல் நீதிமன்ற மாஜிஸ்ரேட் முன்னிலையில் ஆஜர் செய்தனர். இந்தச்சம்பவம் இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



▶ காட்பாடி பகுதிகளில் மக்களுடன் முதல்வர் திட்டத்தில் பெறப்பட்ட மனுக்களில் தீர்வு காணப்பட்டுள்ள மனுக்களுக்குரிய பயனாளிகளுக்கு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் காட்பாடி தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா. சுப்புலெட்சுமி சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி. நந்தகுமார், ப. கார்த்திகேயன், மாநகராட்சி மேயர் சுஜாதாஆனந்தகுமார், துணை மேயர் மா. சுனில்குமார், 1வது மண்டலக்குழுத் தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் த.மாலதி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் க. ஆர்த்தி, மாநகராட்சி ஆணையாளர் ஜானகி ரவீந்திரன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) கலியமூர்த்தி, வருவாய் கோட்டாட்சியர் இரா.க.கவிதா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# நாகுடி அரசு பள்ளி மாணவர்களுக்கு ரூ.2 லட்சம் மதிப்பீட்டில் நவீன சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்ட துவக்க விழா

அறந்தாங்கி : பிப். 10,

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகே நாகுடி அரசு மேல்நிலைப்பள்ளியில் சுமார் 800-க்கு மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர். மாணவர்கள் நலன் கருதி அரியமரக்காடு கிராமத்தை சேர்ந்த சமூக ஆர்வலர்களான கண்ணாத்தாள் ரைஸ் மில் குடும்பத்தினர்கள் சார்பில் ரூ.2 லட்சம் மதிப்பீட்டில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டம் தொடக்க விழா நடைபெற்றது.

நிகழ்ச்சியில் சமூக ஆர்வலர் சின்னம்மாள் மாணவர்களுக்கு நவீன சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டத்தை பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியக் குழு துணைத்தலைவர் ஜெயசுதா பொன்.கணேசன், நெற்குப்பம் பரணி அகிலன்,



சிங்கப்பூர் தொழிலதிபர் விவேகானந்தன், நாகுடி அரசு மேல்நிலைப் பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் ராமசாமி, துணை தலைவர் எம்.குணசேகரன் மற்றும் அரியமரக்காடு சந்திரன், சரவணன், பாண்டியராஜன், நாகுடி வர்த்தக சங்க தலைவர் புகழேந்தி, உதவும்கரங்கள் குழும தலைவர் செல்வமணி, பள்ளி தலைமை ஆசிரியர் முருகேசன் மற்றும் ஆசிரியர்கள், நாகுடி சித்துதிருதரவுக்கரசு, ஆசிரியர் முத்துக்குமார், களக்குடி காசி. சுப்பிரமணியன், சண்முக கண்ணன் மற்றும் நாகுடி ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் ராஜசேகரன், முருகானந்தம், பள்ளி மேலாண்மை குழு தலைவர், உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அரசு பள்ளி மாணவர்களுக்கு சுமார் 2 லட்சம் மதிப்பிலான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டத்தை தொடங்கி வைத்த சமூக அலுவலருக்கு கிராம மக்கள் பாராட்டு தெரிவித்தனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# சென்னை ஓபன் டென்னிஸ்

## இரட்டையர் பிரிவில் இந்திய அணி அரையிறுதிக்கு முன்னேற்றம்

**சென்னை : பிப். 10,**

**இதில் ஒற்றையர் பிரிவின் காலிறுதிக்கு இந்திய வீரர் முகுந்த் சசிகுமார் முன்னேறியுள்ளார்.**



சென்னை ஓபன் சேலஞ்சர் டென்னிஸ் போட்டி நுங்கம்பாக்கத்தில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடந்த இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் சகெத் மைனெனி- ராம்குமார் ஜோடி 4-6, 6-4, 10-6 என்ற செட் கணக்கில் பிரான்சின் டான் ஆட்-பிளான்சேத் இணையை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இதில் நடைபெற்ற ஒற்றையர் பிரிவின் 2-வது ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் முகுந்த் சசிகுமார் 7-6 , 6-3 என்ற நேர் செட்டில் மோஸ் இசார்குவை (துனிசியா) வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.

# சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் புதிய ஜெர்சி வெளியீடு

**சென்னை : பிப். 10,**

**ஐபிஎல் கிரிக்கெட்டில் முன்னணி அணியாக சென்னை சூப்பர் கிங்ஸ் அணி திகழ்ந்து வருகிறது. சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் கேப்டனாக மகேந்திர சிங் டோனி உள்ளார். இவரது தலைமையில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி மீண்டும் ஒருமுறை சாம்பியன் பட்டத்தை வெல்ல 2024 சீசனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.**




இந்த நிலையில் 2024 சீசனில் விளையாடும் புதிய ஜெர்சியை அணி நிர்வாகம் அறிமுகம் செய்துள்ளது. ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டின் தேசிய ஏர்லைன் நிறுவனமான எதிஹாட் ஏர்வேஸ் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் அதிகாரப்பூர்வ ஸ்பான்சராக இணைந்துள்ளது.

இதை வெளிப்படுத்தும் விதமாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது. அப்போது எதிஹாட் ஏர்வைஸ் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் அதிகாரப்பூர்வ ஸ்பான்சராக இணைந்துள்ளதை வெளிப்படுத்துவதில் மகிழ்ச்சி அடைகிறோம் என சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நிர்வாகம் தெரிவித்தது. வீரர்களின் ஜெர்சியின் பின்பக்கத்தில் அவர்களுடைய நம்பர்களுக்கு மேல் இனிமேல் எதிஹாட் ஏர்வைஸ் இடம் பிடித்திருக்கும்.

# ஜூனியர் பெண்கள் தெற்காசிய கால்பந்து இந்தியா, வங்காளதேசம் கூட்டு சாம்பியன்

**டாக்கா : பிப். 10,**

**5-வது ஜூனியர் பெண்கள் தெற்காசிய கால்பந்து சாம்பின்ஷிப் போட்டி (19 வயதுக்கு உட்பட்டோர்) வங்காளதேச தலைநகர் டாக்காவில் நடைபெற்றது.**



5-வது ஜூனியர் பெண்கள் தெற்காசிய கால்பந்து சாம்பின்ஷிப் போட்டி (19 வயதுக்கு உட்பட்டோர்) வங்காளதேச தலைநகர் டாக்காவில் நடைபெற்றது. லீக் சுற்றின் முடிவில் இந்த தொடரின் இறுதிப்போட்டிக்கு இந்தியா மற்றும் வங்காளதேசம் தகுதி பெற்றன.

அதன்படி நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடந்த இறுதிப்போட்டியில் முன்னாள் சாம்பியனான இந்திய அணி, நடப்பு சாம்பியன் வங்காளதேசத்தை எதிர்கொண்டது. திரில்லிங்காக நடைபெற்ற இந்த போட்டி வழக்கமாக வழங்கப்படும் நேரத்தில் 1-1 என்ற கோல் கணக்கில் சமனில் முடிந்தது.

இதையடுத்து போட்டியின் முடிவை நிர்ணயிக்க பெனால்டி ஷூட்-அவுட் முறை கடைப்பிடிக்கப்பட்டது. இதில் முதல் 5 பெனால்டி வாய்ப்புகளையும் இரு அணியினரும் கோலாக மாற்றியதால் 5-5 என்ற கணக்கில் சமநிலை நிலவியது. இதைத்தொடர்ந்து சடன்டெத் முறை அமலுக்கு வந்தது.

இதிலும் இரு அணியினரும் வாய்ப்புகளை தவறவிடாமல் கோல் அடித்ததால் பெனால்டி ஷூட்-அவுட் முறை நீடித்து கொண்டே போனது. ஒரு கட்டத்தில் 11-11 என்ற கோல் கணக்கில் சமநிலையில் இருந்தபோது, ஆட்டத்தை நிறுத்திய நடுவர்கள் வெற்றியாளரை முடிவு செய்ய 'டாஸ்' முறையை கொண்டு வந்தனர்.

டாஸ் போடப்பட்டதில் இந்திய அணி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. இந்த முடிவை ஏற்றுக்கொள்ளாத வங்காளதேச வீராங்கனைகள் நடுவர்களுடன் வாக்குவாதம் செய்ததுடன், மைதானத்திலேயே அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். ரசிகர்களும் அவர்களுக்கு ஆதரவாக குரல் எழுப்பினர். சிலர் மைதானத்திற்குள் தண்ணீர் பாட்டில்களை தூக்கி வீசினர். இதனால் அங்கு கூச்சல், குழப்பம் நிலவியது. பின்னர் போட்டி அதிகாரிகள், நடுவர்கள் இருதரப்பினரையும் கலந்து ஆலோசித்து இந்தியா, வங்காளதேசத்தை கூட்டாக பெற்றுக் கொண்டனர்.

# ஒலிம்பிக் மெடலுடன் ஈபிள் டவர் பகுதியை எடுத்து செல்லலாம் : பிரான்ஸ் அசத்தல் அறிவிப்பு

**பிரான்ஸ் :பிப். 10,**

**2024 பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் வெல்லும் வீரர், வீராங்கனைகளுக்கு வழங்கப்பட உள்ள பதக்கங்களில் ஈபிள் டவரின் இரும்புதுண்டுகளை சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளதாக பிரான்ஸ் தெரிவித்துள்ளது.**

2024ம் ஆண்டிற்காக ஒலிம்பிக் போட்டிகள் பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் நடைபெற உள்ளது. இந்த தொடரில் 32 முக்கிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட உள்ளன. அதில், 10, 500 வீரர் வீராங்கனைகள் பங்கு பெற உள்ளன. இந்த போட்டிகளில் வெல்லும் வீரர்களுக்கு வழங்க சுமார் 5,084 பதக்கங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. இந்த ஆண்டு போட்டிகள் பாரீஸில் நடைபெறுவதால், அதனை வீரர், வீராங்கனைகள் என்றும் நினைவில் வைத்திருக்கவும், பிரான்சின் அடையாளமாக ஏதேனும் வழங்க வேண்டும் என பாரீஸ் ஒலிம்பிக் குழு திட்டமிட்டது.




இதையடுத்து, 1889 ஆம் ஆண்டு முதல் இன்று வரை உள்ள ஈபிள் டவரின் பழைய பாகங்களில் உள்ள இரும்பின் பகுதிகளைப் பதக்கத்தில் பதிக்கத் திட்டமிட்டது.

இதனையடுத்து, தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களின் நடுவே, அறுகோண வடிவில் இரும்பினால் செய்யப்பட்ட ஈபிள் டவரின் பகுதி பொருத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு போட்டியில் வெற்றி பெறும் வீரர்கள் தங்களுடன் பாரீஸின் வரலாற்றையும், விலைமதிப்பில்லாத பொக்கிஷத்தையும் பெற்றுச் செல்வார்கள் என பாரீஸ் ஒலிம்பிக் குழு தலை டோனி எஸ்டாங்குவே தெரிவித்துள்ளார்.

2021ம் ஆண்டு ஜப்பானில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியின் போது, மறுசுழற்சி செய்யப்பட்ட உலோகங்கள் பதக்கத்தில் பயன்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது,

# "ஜெய் ஸ்ரீராம் என சொல்வதிலோ, அல்லாஹு அக்பர் என சொல்வதிலோ எந்த வித்தியாசமும் இல்லை" – முகமது ஷமி

**புதுடெல்லி : பிப். 10,**

**"ஜெய் ஸ்ரீராம் என்று சொல்வதிலோ, அல்லாஹு அக்பர் என்று சொல்வதிலோ எந்த தீங்கும் இல்லை. ஏனெனில் இதில் எந்த வித்தியாசமும் இல்லை. ஆயிரம் முறை சொல்லட்டும்" என்று இந்திய கிரிக்கெட் வீரர் முகமது ஷமி தெரிவித்துள்ளார்.**

ஷமி தற்போது நடைபெற்று வரும் இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் முழங்கால் காயம் காரணமாக விளையாடவில்லை. ஒருநாள் உலகக் கோப்பையில் இலங்கைக்கு எதிரான போட்டியில் விக்கெட்டை வீழ்த்திய பிறகு ஷமி களைப்பினால் முழந்தாளிட்டார், உடனே அவர் சஜ்தா செய்ததாக சமூக ஊடகங்களில் புகைப்படத்துடன் பரப்பப்பட்டது. ஆனால் தான் சஜ்தா செய்யவில்லை என்று அப்போது கூறிய ஷமி , சஜ்தா என்று கூறியவர்கள் மீது கடுமையான கருத்துக்களையும் தெரிவித்தது சர்ச்சைக்குள்ளானது.

"எப்படி சஜ்தா விவகாரம் வந்தது? ராமர் கோயில் கட்டப்படும் போது ஜெய் ஸ்ரீராம் என்று சொன்னால் என்ன பிரச்சினை? ஆயிரம் முறை சொல்லட்டும். நான் அல்லாஹு அக்பர் என்று சொல்ல விரும்பினால் ஆயிரம் முறை சொல்வேன்" என முகமது ஷமி தெரிவித்துள்ளார். உலகக்கோப்பை போட்டியின் போது அகமதாபாத்தில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் ஜெய் ஸ்ரீராம் கோஷம் எழுந்ததாக சர்ச்சை கிளம்பியது நினைவிருக்கலாம். அது தொடர்பாகத்தான் தற்போது ஷமி இவ்வாறு கூறியுள்ளார்.




உண்மையில் இலங்கைக்கு எதிரான அந்த உலகக்கோப்பைப் போட்டியில் என்ன நடந்தது என்பதை யூ டியூப் சேனலில் ஷமி விளக்கும் போது, "நான் தொடர்ச்சியாக 5-வது ஓவரை வீசினேன், என் உடல் அனுமதிக்கும் இடத்தையும் தாண்டி முயற்சி எடுத்து வீசினேன். பந்து எட்ஜ் எடுக்காமல் நூலிழையில் மட்டையைத் தவற விட்டுச் சென்றது, எனவே அந்த 5-வது விக்கெட் விழுந்தவுடன் களைப்பினால் நான் முழந்தாளிட்டேன். யாரோ என்னைப் பாராட்ட சற்றே தள்ளியதால் கொஞ்சம் முன்னால் நகர்ந்தேன்

அந்தப் புகைப்படம் சமூக வலைத்தளங்களில் விரைவாகப் பரவியது. என்ன நினைத்து விட்டார்கள் என்றால் நான் சஜ்தா செய்ய நினைத்ததாகக் கூறிவிட்டனர். ஆனால் நான் சஜ்தா செய்யவில்லை. நான் அவர்களுக்கு ஒரேயொரு அறிவுரையைத்தான் வழங்க விரும்புகிறேன். இது போன்ற தொந்தரவுகளைச் செய்ய வேண்டாம் என்பதுதான் என் அறிவுரை" என்று கூறியிருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறும்போது, "இந்த விஷயத்தில் நான் யாருக்கும் பயப்பட மாட்டேன். நான் ஒரு முஸ்லிம். இதனை நான் முன்னரே தெரிவித்திருக்கிறேன். அதில் நான் பெருமை கொள்கிறேன். இந்தியனாக இருப்பதிலும் பெருமை கொள்கிறேன். எனக்கு நாடுதான் முதன்மை. எனவே இது யாருக்காவது பிரச்சினையானால் நான் அதைப்பற்றி கவலைப்பட மாட்டேன். நான் மகிழ்ச்சியாக வாழ்கிறேன். என் நாட்டிற்காக ஆடுகிறேன். அதை விட எனக்கு வேறு எதுவும் பெரிது கிடையாது. சர்ச்சைகளை வேண்டுமென்றே சமூக ஊடகத்தார் செய்தால் நான் அவர்களைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. சஜ்தாவைப் பொறுத்தவரை நான் அதை விரும்பினால், அதைச் செய்ய வேண்டும் என்று நினைத்தால் நிச்சயம் செய்வேன். இதைப் பற்றி வேறு யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. ஒவ்வொரு மதத்திலும், மற்ற மதத்தைச் சேர்ந்த நபரை விரும்பாத 5 முதல் 10 நபர்களை நீங்கள் சந்திப்பீர்கள். அதற்கு எதிராக எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை" என்று தெரிவித்துள்ளார்.

# கால்பந்தாட்டப் போட்டியில் நீல அட்டை : ஆட்சேபிக்கும் ஃபிஃபா

**இங்கிலாந்து : பிப். 10,**

**கால்பந்தாட்டங்களில் நீல நிற அட்டையை பரீட்சார்த்த முறையில் சோதித்துப்பார்க்க கால்பந்தாட்ட விதிமுறைகள் குழு திட்டமிட்டுள்ளது.**

உலக அளவில் அதிகமான ரசிகர்களைக் கொண்ட விளையாட்டு என்றால் அது கால்பந்தாட்டம் தான். சர்வதேச அளவிலான போட்டிகளில் மற்ற விளையாட்டில் இல்லாத அளவுக்கு ஆக்ரோஷமும், சச்சரவுகளும் இந்த போட்டியின் போது ஏற்படும் வாய்ப்புகள் அதிகம். அதனாலேயே, போட்டியில் தேவையற்ற சர்ச்சையில் ஈடுபடும் வீரர்களைக் கட்டுப்படுத்த மஞ்சள் மற்றும் சிவப்பு அட்டைகள் மூலம் சில விதிமுறைகள் கொண்டு வரப்பட்டது.

ஆட்டத்தின் போது ஒரு அணியின் வீரர் எதிரணி வீரருடன் மோதலில் ஈடுபட்டால், அதன் தன்மையைப் பொறுத்து நடுவர் மஞ்சள் அட்டையைக் கட்டுவார். இதன் மூலம் அவருக்கு எச்சரிக்கை கொடுக்கப்படும். இரண்டாவது முறையும் அந்த வீரர் மஞ்சள் அட்டையைப் பெற்றால், அந்த ஆட்டத்திலிருந்து வெளியேற்றப்படுவார். ரெட் கார்டு எனப்படும் சிவப்பு அட்டையைப் போட்டியின் போது ஒரு வீரர் பெற்றால், உடனடியாக அந்த போட்டியிலிருந்து வெளியேற்றப்படுவார்.




இந்தச் சூழலில், சர்வதேச கால்பந்து விதிமுறைகள் குழுவானது இந்த இரண்டு அட்டைகளுடன் மூன்றாவதாக நீல அட்டையையும் சர்வதேச போட்டிகளில் பரீட்சார்த்த முறையில் கொண்டு வரத் திட்டமிட்டுள்ளது.

அதாவது சர்வதேச அளவிலான 2 மற்றும் 3-ம் தரப் போட்டிகளில் இதனைப் பரிசோதித்துப் பார்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி போட்டியில் தவறு செய்தமைக்காக ஒரு வீரருக்கு நீல அட்டை காட்டப்பட்டால், அவர் 10 நிமிடங்களுக்கு மைதானத்திற்கு வெளியே இருப்பார். ஒரு போட்டியில் இரண்டு நீல அட்டைகளை ஒருவர் பெற்றால், சிவப்பு அட்டை வழங்கி விலக்கப்படுவார்.

ஒரு நீலம் மற்றும் மஞ்சள் அட்டையைப் பெற்றாலும் சிவப்பு அட்டை வழங்கப்படும். 1970 உலகக் கோப்பையில் மஞ்சள் மற்றும் சிவப்பு அட்டைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதன் பிறகு மூன்றாவதாக இன்னொரு அட்டை அறிமுகப்படுத்தப் படுவது இப்போதுதான்.

கால்பந்தாட்டத்தில் நேர்மையான விளையாட்டை ஊக்குவிக்க நீல அட்டை முறை கொண்டுவரப்படுவதாக விதிமுறைகள் குழு கூறினாலும், சர்வதேச கால்பந்து கூட்டமைப்பான ஃபிஃபா இது சரியான முடிவு அல்ல என எதிர்ப்பு தெரிவித்துள்ளது. ரசிகர்களும் இந்த முறைக்குக் கடுமையான எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்.

வரலாறு சினிமா

# 2026-ம் ஆண்டு தளபதியை முதல்வராக்க வேண்டும் புஸ்ஸி ஆனந்த் பேச்சால் பரபரப்பு

**சென்னை : பிப். 10,**

**2026-ம் ஆண்டு தளபதியை முதல்வராக்க வேண்டும் என புஸ்ஸி ஆனந்த் பேசியுள்ளார். இந்த விஷயம் விஜய் ரசிகர்கள் மத்தியில் கவனம் ஈர்த்துள்ளது.**



நடிகர் விஜய் கடந்த பிப்ரவரி 2-ம் தேதி தமிழக வெற்றி கழகம் எனத் தனது கட்சிப் பெயரை அறிவித்தார். பின்பு அவரின் அரசியல் செயல்பாடுகள் ஒவ்வொன்றும் ரசிகர்கள் மத்தியில் பேசுபொருளாகியுள்ளது. அந்த வகையில் சமீபத்தில் நடிகர் விஜய் தமிழக வெற்றி கழக நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார்.

தமிழகம் மட்டுமல்லாது கேரளாவைச் சேர்ந்த விஜய் மக்கள் இயக்கத் தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர் அவர்களுடன் காணொலி மூலம் 5 நிமிடங்கள் விஜய் உரையாடினார். விமர்சனங்களை இன்முகத்தோடு கடந்து செல்ல வேண்டும் என்றும், இனி வரும் காலத்தில் மக்கள் பிரச்சினைகளைக் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்பதுதான் விஜயின் காணொலி உரையின் சாராம்சமாகும்.

இந்தக் கூட்டத்தினை புஸ்ஸி ஆனந்த் ஒருங்கிணைத்திருந்தார். இந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த நிர்வாகிகளை உற்சாகப்படுத்தும் விதமாக அவர் பேசியிருப்பதுதான் தற்போது வைரலாகி வருகிறது.

"உங்கள் ஒவ்வொருவரின் உழைப்பில் தான் கட்சியின் எதிர்காலம் இருக்கிறது. இதற்கு முன்பு நாம் எப்படி இருந்தோம் என்பது வேறு. இதற்கடுத்து, நம் தலைவர் என்ன சொல்கிறாரோ அதை தான் செய்யப்போகிறோம். தலைவர் என்கிற பதவி இனி யாருக்கும் இல்லை. 2026-ம் ஆண்டு முதலமைச்சராக தலைவரை நாம் அமர வைக்கவேண்டும். 2026 தான் நம் இலக்கு" என அவர் பேசியுள்ளார். இது விஜய் ரசிகர்கள் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# ரஜினியின் 'ஆளுமை'யில் மதநல்லிணக்கம் பேசும் படம் 'லால் சலாம்'

**சென்னை : பிப். 10,**

**ட்ரெய்லர் வெளியானபோதே, 'விளையாட்டில் மதத்தை கலந்துருக்கீங்க' என்ற வசனத்தின் மூலம் சமூக வலைதளங்களில் பரவலாக கவனம் பெற்ற படம். கூடவே ரஜினியின் சிறப்புத் தோற்றம், நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஐஸ்வர்யா ரஜினிகாந்தின் இயக்கம் என்ற எதிர்பார்ப்புகளுடன் வெளியாகியுள்ள 'லால் சலாம்' திரைப்படம், அந்த எதிர்பார்ப்புகளுக்கு நியாயம் செய்ததா என்று பார்க்கலாம்.**

இஸ்லாமியர்கள் பெரும்பானமையாக வாழும் முரார்பாத் என்ற கிராமத்தில் முஸ்லிம்களும் இந்துக்களும் அண்ணன், தம்பியாக பழகி வருகின்றனர். அந்தக் கிராமத்தில் இருந்து இளம் வயதில் மும்பைக்கு சென்று அங்கு பெரிய தொழிலதிபராக வலம் வரும் மொய்தீன் பாய் (ரஜினிகாந்த்) மகன் சம்சுதீனும் (விக்ராந்த்) அவரது நெருங்கிய நண்பரின் மகன் திருவும் (விஷ்ணு விஷால்) சிறுவயது முதலே எலியும் புலியுமாக இருக்கின்றனர்.

கிரிக்கெட் போட்டியில் ஏற்படும் சிறு மோதல், பெரிய கலவரமாக வெடித்து அண்ணன், தம்பிகளாக பழகிவந்த இந்து - முஸ்லிம் மக்களிடையே பெரிய பிளவு ஏற்படுகிறது. இதனைத் தொடர்ந்து கிராமத்தில் தேர்த் திருவிழா நடத்த இந்து மக்கள் முடிவு செய்யும்போது ஓர் அரசியல் கட்சியின் சதியால் திருவிழா தடுக்கப்படுகிறது. இறுதியில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே ஒற்றுமை நிலவியதா, தேர்த் திருவிழா நடந்ததா, இதில் மொய்தீன் பாயின் பங்கு என்ன என்பதை பேசுகிறது 'லால் சலாம்'.

மதங்களை முன்னிறுத்தி விவாதங்கள் தொடர்ந்து எழும் சூழலில் இப்படியொரு கதைக்களத்தை கையில் எடுத்த ஐஸ்வர்யா ரஜினிகாந்தை மனதார பாராட்டலாம். மதநல்லிணக்கத்தை வலியுறுத்துகிறேன் என பிரச்சார நெடியுடன் வலிந்து திணிக்காமல் காட்சிகளுக்கு தேவையான வசனங்களின் மூலம் முக்கியமான கருத்தை பார்வையாளர்களிடம் கொண்டு சேர்ப்பதில் ஓரளவு வெற்றியும் பெறுகிறார்.



படத்தின் முதல் பாதி முழுவதும் முரார்பாத் கிராமத்தில் வாழும் மக்களை பற்றியும், விஷ்ணு விஷால் - விக்ராந்த் இடையிலான பகைமை, விளையாட்டில் தூவப்படும் வெறுப்புணர்வு மெல்ல எப்படி ஒரு கிராமத்தையே பாதிக்கிறது உள்ளிட்ட விஷயங்கள் நான்-லீனியர் முறையில் சொல்லப்படுகிறது. கலவரத்தைத் தொடர்ந்து சிறைக்கு சென்று வெளியே வரும் விஷ்ணு விஷால், அவர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், இடையில் ஒரு காதல் பாட்டு என சற்றே தொய்வுடன் தொடங்கும் படம், ரஜினியின் என்ட்ரிக்கு பிறகு சூடு பிடிக்கிறது.

சமீப வருடங்களில் வெளியான ரஜினி படங்களையே தூக்கி சாப்பிடும்படியாக ரஜினிக்கு ஒரு மாஸ் இன்ட்ரோ காட்சி. கூடவே ரஹ்மான் குரலில் 'ஜலாலி ஜலாலி' பாடல் ரஜினி ரசிகர்களுக்கு நிச்சயம் செம விருந்து. அதற்கு நியாயம் செய்யும் வகையில் ரஜினியின் கதாபாத்திர வடிவமைப்பும் சிறப்பு.

ஷார்ப் ஆன வசனங்கள், வயதுக்கு ஏற்ற பக்குவமான கேரக்டர் என தன்னுடைய திரை ஆளுமையால் மொத்தப் படத்தையும் தாங்கிப் பிடிக்கிறார். சிறப்புத் தோற்றம் என்று விளம்பரப்படுத்தப்பட்டாலும் ஏறக்குறைய முழு படத்திலும் ரஜினியின் ஆதிக்கம்தான். மதநல்லிணக்கம் தொடர்பாக ரஜினி பேசும் வசனங்கள் அனைத்துக்கும் அரங்கம் அதிர்கிறது. குறிப்பாக, கிரிக்கெட் மைதானத்தில் மைக்கில் பேசுபவரை அழைத்துபேசுவது, இந்துக்கள் - முஸ்லிம்கள் இடையே அமைதியை ஏற்படுத்த நடக்கும் கூட்டத்தில் ரஜினி பேசுவது ஆகிய காட்சிகள் கூஸ்பம்ப்ஸ் ரகம்.

படத்தின் பிரச்சினையே முதல் பாதி நான்-லீனியரில் சொல்லப்படுவதுதான். நிகழ்காலம், கடந்த காலம் இரண்டுமே ஆறு மாத இடைவெளியில் நடப்பவை என்பதால் இரண்டுக்குமான வித்தியாசத்தை புரிந்துகொள்வதில் குழப்பம் ஏற்படுகிறது. போரடிக்காத வகையில் காட்சிகள் அடுத்தடுத்து நகர்ந்தாலும் இலக்கில்லாத வகையில் எங்கெங்கோ செல்வதால் எந்த இடத்திலும் படத்துடன் ஒன்றமுடியாத நிலை ஏற்படுகிறது.

ஸ்போர்ட்ஸ் கதைக்களம் என்று விளம்பரப்படுத்தப்பட்ட படத்தில் மிகச் சிறிய அளவே கிரிக்கெட் தொடர்பான காட்சிகள் இடம்பெறுகின்றன. அவற்றிலுமே எந்தவித பரபரப்போ, அழுத்தமோ இல்லை. படத்தின் மையக்கரு தேர்த் திருவிழாவா அல்லது கிரிக்கெட்டா என்று தெளிவாக சொல்லமுடியாமல் தடுமாறியுள்ளனர். எடிட்டிங்கில் கூடுதலாக கவனம் செலுத்தியிருக்கலாம். பல காட்சிகள் ஒன்றோடு ஒன்று தொடர்பற்றவையாக இருக்கின்றன.

ரஜினி தவிர்த்து விஷ்ணு விஷால், விக்ராந்த், தம்பி ராமையா, செந்தில், ஜீவிதா, விவேக் பிரசன்னா, மூணாறு ரமேஷ் என அனைவரும் தங்கள் பங்கை சிறப்பாக செய்துள்ளனர். விஷ்ணு விஷாலுக்கு ஜோடியாக வரும் அனந்திகா சனில்குமார் ஒரே ஒரு பாடலுக்கு மட்டும் உதவியிருக்கிறார். படத்தில் முக்கியக் கதாபாத்திரம் என்று சொல்லப்பட்ட தன்யா பாலகிருஷ்ணாவின் காட்சிகள் பெரிதாக இல்லை (வெட்டப்பட்டனவோ?) சமூக வலைதள சர்ச்சை காரணமா என்று தெரியவில்லை. இறுதிக் காட்சியில் ஓரிரு நிமிடங்கள் வந்தாலும் ஈர்க்கிறார்.

ஏ.ஆர்.ரஹ்மானின் பின்னணி இசை கவனிக்க வைக்கிறது. தேவாவின் குரலில் வரும் 'அன்பாளனே' பாடல் இதயத்தை உருக வைக்கிறது. தேர்த் திருவிழா பாடல், மறைந்த ஷாஹுல் ஹமீதுவின் குரலை ஏஐ மூலம் பயன்படுத்தியிருக்கும் ஒரு பாடல் ஆகியவை சிறப்பு.

படத்தில் பல இடங்களில் எமோஷனல் காட்சிகள் நன்றாக கைகொடுத்துள்ளன. குறிப்பாக, செந்தில் தனது மகன் குடும்பத்தை பற்றி பேசும் காட்சி, மருத்துவமனையில் இருக்கும் தனது மகனை நினைத்து ரஜினி 'அல்லாஹ்' என்று கதறி அழும் காட்சி ஆகியவை நெகிழச் செய்கின்றன.

சமூக வலைதளங்களில் மதங்களை முன்வைத்து ஒருவர் மீது ஒருவர் வீசும் வன்மக் கணைகளுக்கு நடுவே ஒரு முக்கிய கருத்தை, ரஜினி என்ற 'பிராண்ட்' உடன் சுமந்து வந்திருக்கும் 'லால் சலாம்' படத்தை தாராளமாக வரவேற்கலாம். திரைக்கதையை மெருகேற்றி, காட்சிகளில் அழுத்தம் கூட்டியிருந்தால் இன்னும் கொண்டாடப்பட்டிருக்கும்.

வரலாறு உலகம்

# போருக்கு மத்தியில் ஆயுதப்படை தலைமை தளபதியை நீக்கிய உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி



**உக்ரைன் : பிப். 10,**

**உக்ரைன் நாட்டின் ஆயுதப்படை தலைமை தளபதியாக இருந்தவர் வலேரி ஜலுன்ஸ்யி. இவரை அந்நாட்டின் அதிபரான ஜெலன்ஸ்கி அதிரடியாக நீக்கியுள்ளார். இருவருக்கும் இடையில் உரசல் இருந்து வந்த நிலையில் தற்போது ஜெலன்ஸ்கி இந்த அதிரடி முடிவை எடுத்துள்ளார்.**

ரஷியப் படைகள் உக்ரைன் எல்லைக்குள் நுழைந்தபோது இவரது தலைமையிலான ஆயுதப்படை சிறப்பாக செயல்பட்டது. இதனால் இரும்பு தளபதி என அழைக்கப்பட்டார். ரஷியாவை தொடக்கத்தில் சமாளித்த போதிலும், அதன்பின் ரஷியப்படைகள் உக்ரைனுக்குள் சென்று பேரழிவை ஏற்படுத்தியது.

ரஷியாவுக்கு எதிராக போர் நடைபெற்று வரும் நிலையில், தலைமை தளபதி நீக்கப்பட்ட நிலையில், புதிதாக நியமிக்கப்படும் நபர் எப்படி படைகளை வழிநடத்திச் செல்வார் என எதிர்பார்ப்புடன் கூடிய கேள்வி எழுந்துள்ளது. ரஷியப்படைக்கு எதிராக உக்ரைன் எதிர்தாக்குதல் என்ற யுக்தியை கடந்த ஜூன் மாதம் தொடங்கியது. ரஷிய படைகள் பெரிய அளவில் தாக்குதல் நடத்தாத போதிலும், உக்ரைன் படையால் சிறிய அளவிலேயே முன்னேற முடிந்தது. தொடர்ந்து முன்னேற முடியாமல் தவித்து வருகிறது. உக்ரைன் போரில் சுமார் 1000 கி.மீட்டரை இழந்துள்ளது.

புதிதாக நியமிக்கப்படும் தளபதி தலைமையில் உக்ரைன புதிய வியூகத்தின் போரை எதிர்கொள்ள வாய்ப்புள்ளதாக கருதப்படுகிறது. மேற்கத்திய நாடுகள் தொடர்ந்து ஆயுதம் வழங்க உத்தரவாதம் வழங்காத நிலையில், ரஷியா தொடர்ந்து டிரோன் தாக்குதல் மூலம் வளங்களை அழிப்பதை தடுக்க உக்ரைன் அதிக அளவில் செயல்பாட்டை வெளிப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளது.

டிரோன்கள் மற்றும் பிற மேம்பட்ட ஆயுதங்கள் உள்ளிட்ட தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் மூலம் மட்டுமே உக்ரைன் ரஷ்யாவின் மிகப்பெரிய ராணுவத்துடன் போட்டியிட முடியும் என வலேரி ஜலுஸ்ன்யி தொடர்ந்து வலியுறுத்தி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# "எலான் மஸ்க் ஒரு புத்திசாலி" ரஷ்ய அதிபர் புதின் பாராட்டியதன் பின்னணி



**புதுடெல்லி : பிப். 10,**

**ரஷ்ய அதிபர் புதின் ஒரு நேர்காணலின் போது டெஸ்லா நிறுவனரும், உலக கோடீஸ்வரருமான எலான் மஸ்கை 'புத்திசாலி' எனப் பாராட்டியுள்ளார்.**

ரஷ்ய அதிபர் புதின், பிரபல தொகுப்பாளரான டக்கர் கார்ல்சன் நடத்திய ஒரு நேர்காணலில் கலந்து கொண்டார். அதில் பங்கேற்ற புதினிடம், டக்கர் கார்ல்சன் பல்வேறு கேள்விகளைக் கேட்டார். உக்ரைன் - ரஷ்யா போர் குறித்து பேசிய புதின், "ரஷ்யாவை தோற்கடிக்க முடியாது. ஆனால், போலாந்து மற்றும் லாட்வியா போன்ற அண்டை நாடுகளுக்கு போரை விரிவுபடுத்த விரும்பவில்லை" என்றார்.

பின்னர் ஏஐ மற்றும் நியூராலிங்க் பற்றி கேள்வி கேட்டபோது, "மனிதகுலம் தற்போது பல அச்சுறுத்தல்களை எதிர்கொள்கிறது. மரபணு ஆராய்ச்சியாளர்களால் தற்போது ஒரு மனிதநேயமற்ற மனிதன், ஒரு விளையாட்டு வீரர், விஞ்ஞானி மற்றும் ராணுவ மனிதன் என பல்வேறு நபர்களை உருவாக்க முடியும்" என்றார்.

அதன் பிறகு 'சிப்'-ஐ மனிதனின் மூளையில் பொருத்துவது தொடர்பாக புதினிடம் கேள்வி எழுப்பப்பட்டது, அப்போது அவர், "எலான் மஸ்கை நிறுத்துவது அவ்வளவு சுலபம் அல்ல. அவர் எதை அடைய வேண்டும் என்பதில் மிகத் தெளிவாக இருக்கிறார். அதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறார். அவரின் கண்டுபிடிப்புகள், சிந்தனைகள் பற்றி நாம் அறிவு சார்ந்த கேள்விகளை தொடர்ந்து எழுப்பினால்தான், அவருடைய கண்டுபிடிப்புகள் இன்னும் மேம்பட்டதாக அமையும்.

அறிவுசார்ந்த கேள்விகள் வழியாக அவருடன் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்தினால் மட்டுமே அவரின் வேகத்தை குறைக்க முடியும். மூளையில் சிப் வைக்கும் இந்த ஆய்வு முழுமை பெற்ற பிறகே அதனை பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும்" என்றார். எலன் மஸ்க் இந்த நேர்காணலை தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ளார்.

நியூராலிங்க் நிறுவனம் தான் வடிவமைத்துள்ள எண்ணங்களை செயல்படுத்தும் வகையில் மூளைக்கும் கணினிக்குமான இன்டெர்ஃபேஸ் (BCI) இணைப்பை உருவாக்கும் வகையிலான 'சிப்'-ஐ மனிதனின் மூளையில் பொருத்தி சோதனையை தொடங்கியுள்ளது. இதனை எலான் மஸ்க் சில தினங்களுக்கு முன்னர் அதிகாரபூர்வமாக அறிவித்திருந்தார். இது மருத்துவத்தில் ஒரு மைல்கல் என்பது குறிப்பிடத்தக்கது.

# "நேரம் வந்துவிட்டால் எந்த சக்தியாலும் நம்மை தோற்கடிக்க முடியாது" – இம்ரான் கான்



**இஸ்லாமாபாத் : பிப். 10,**

**பாகிஸ்தானில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பதிவான வாக்குகள் எண்ணப்பட்டுவரும் நிலையில், நிச்சயமாக நாங்கள் வெற்றி பெறுவோம் என்று இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.**

பாகிஸ்தானில் மொத்தம் 336 நாடாளுமன்ற தொகுதிகள் உள்ளன. இதில் 60 இடங்கள் பெண்களுக்காகவும், 10 இடங்கள் சிறுபான்மை மக்களுக்காகவும் ஒதுக்கப்பட்டு உள்ளன. மீதம் உள்ள 266 தொகுதிகளுக்கும் நேரடியாக மக்கள் மூலம் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

பாகிஸ்தானை பொறுத்தவரை முன்னாள் பிரதமர்களான இம்ரான்கானின் தெஹ்ரீக் இ இன்சாப் கட்சி, நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் நவாஸ் ஆகிய கட்சிகளிடையே கடும் போட்டி நிலவுகிறது.

அந்தவகையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அங்கு நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்றது. அதேபோல் பஞ்சாப், சிந்து, கைபர் பக்துங்க்வா, பலுசிஸ்தான் ஆகிய மாகாணங்களுக்கும் தேர்தல் நடைபெற்றது. இதற்காக நாடு முழுவதும் 90 ஆயிரத்து 582 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு இருந்தன. அதேபோல் தேர்தல் பாதுகாப்பு பணியில் சுமார் 65 ஆயிரம் பாதுகாப்பு படையினர் ஈடுபடுத்தப்பட்டு இருந்தனர். மேலும் சட்டம், ஒழுங்கு பிரச்சினைகளை தவிர்ப்பதற்காக முக்கிய இடங்களில் செல்போன் மற்றும் இணைய சேவைகள் துண்டிக்கப்பட்டன.

இந்தநிலையில் காலை 8 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது. இதில் பொதுமக்கள் ஆர்வமுடன் நீண்டவரிசையில் காத்திருந்து வாக்களித்தனர். முன்னாள் பிரதமர் இம்ரான்கானும் சிறையில் இருந்தபடியே தபால் மூலம் தனது வாக்கை செலுத்தினார். இந்நிலையில் பொதுத் தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை நடைபெற்று வரும் நிலையில், பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் (பிடிஐ) நிறுவனர் இம்ரான் கான் வெற்றி பெற்றதாகக் கூறி, மக்கள் தங்கள் உறுதியை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இதனிடையே சிறையில் அடைக்கப்பட்டுள்ள இம்ரான் கான் தனது எக்ஸ் வலைதளத்தில், "மக்களின் விருப்பத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதற்கு சாத்தியமான அனைத்து வழிகளையும் கையாண்ட போதிலும், நமது மக்கள் இன்று (பிப். 8) வாக்களிப்பதற்காக தேர்தல் மூலம் பேசினார்கள். நாம் பலமுறை கூறியது போல், "நமக்கான நேரம் வந்துவிட்டால் எந்த சக்தியாலும் நம்மை தோற்கடிக்க முடியாது. படிவம் 45ஐப் பெறுவதன் மூலம் வாக்கைப் பாதுகாப்பது இப்போது முக்கியமானது" என்று அதில் பதிவிட்டுள்ளார். மேலும் தற்போது வாக்கு எண்ணிக்கையில் இருந்து வெளிவரும் போக்குகளின் புகைப்படத்தையும் இம்ரான் கான் பகிர்ந்துள்ளார், 'படிவம் 45' என்பது பாகிஸ்தானின் தேர்தல் ஆணையத்தின் வாக்கு எண்ணிக்கை அடிப்படையிலான அறிக்கை என அறியப்படுகிறது.

# பாகிஸ்தான் பொதுத் தேர்தல் முடிவுகள்

## முந்தும் இம்ரான் கான் கட்சி



**இஸ்லாமாபாத் : பிப். 10,**

**பாகிஸ்தான் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் இம்ரான் கானின் கட்சி முன்னிலை வகித்து வருகிறது.**

பாகிஸ்தானின் தேசிய அவை (நாடாளுமன்றம்) மற்றும் மாகாண சட்டப்பேரவைகளுக்கான தேர்தல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன. இதுவரை வெளியான முடிவுகளின்படி தேசிய அவைக்கான தேர்தலில் இம்ரான் கானின் பிடிஐ மற்றும் கூட்டணி கட்சிகள் 50 இடங்களில் வெற்றி பெற்றுள்ளன. நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்), 44 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. பிலாவல் பூட்டோ சர்தாரியின் பாகிஸ்தான் மக்கள் கட்சி 35 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. மற்றவர்கள் 8 இடங்களில் வெற்றி பெற்றுள்ளனர். தேர்தல் முடிவுகள் இன்னும் முழுமையாக வெளியாகவில்லை.

இந்நிலையில், செய்தியாளர்களிடம் பேசிய பிடிஐ கட்சியின் சட்டக் குழு தலைவர் கோஹர் அலி கான், "எங்கள் கட்சி 150 இடங்களுக்கு மேல் வெற்றி பெறும். மத்தியிலும், பஞ்சாப் மாகாணத்திலும் நாங்கள் ஆட்சி அமைப்போம். பாகிஸ்தான் மக்கள் கட்சி உடனோ அல்லது பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) உடனோ கூட்டணி அமைப்பதற்கான வாய்ப்பே இல்லை. அவர்களுடன் சேர்ந்து கூட்டணி அரசு அமைக்க எங்களுக்கு விருப்பம் இல்லை.

கைபர் பக்துன்வா மாகாணத்திலும் எங்கள் கட்சி முன்னிலை வகிக்கிறது. அங்கும் எங்கள் ஆட்சிதான் அமையும். பிடிஐ கட்சியைச் சேர்ந்த சுயேட்சைகள் அணிமாற மாட்டார்கள். குதிரை பேரம் நடக்க வாய்ப்பு இருந்தாலும் அவர்கள் கட்சியின் பக்கம் உறுதியாக நிற்பார்கள்" என தெரிவித்தார்.

முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய முன்னாள் நிதி அமைச்சரும், பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) மூத்த தலைவருமான ஐஷக் தர், "சுயேட்சைகள் எங்களை தொடர்பு கொண்டிருக்கிறார்கள். அரசியல் சாசனப்படி 72 மணி நேரத்தில் அவர்கள் எந்தக் கட்சியில் வேண்டுமானாலும் இணைய முடியும். எங்கள் கட்சியைப் பொறுத்தவரை யாரையும் நாங்கள் கட்டாயப்படுத்த மாட்டோம். அதேநேரத்தில், அவர்கள் எங்கள் கட்சியில் சேர வேண்டும் என்று எங்களை தொடர்பு கொள்கிறார்கள்" என கூறினார்.

இதனிடையே, நவாஸ் ஷெரீப்பின் மகளும், பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்)-ன் தலைமை ஒருங்கிணைப்பாளருமான மரியம் நவாஸ் ஷெரீப், "பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சிக்குக்கு எதிராக சில ஊடகங்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு பொய் பிம்பங்களைக் கட்டமைத்த போதிலும், தேசிய அளவிலும், பஞ்சாபிலும் அதிக இடங்களில் வெற்றி பெற்ற கட்சியாக நாங்கள் உருவெடுத்திருக்கிறோம். இன்னும் சில முடிவுகளுக்காக காத்திருக்கிறோம். அனைத்து முடிவுகளும் வெளியானதும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சியின் தலைமையகத்தில் வெற்றி உரையை நவாஸ் ஷெரீப் நிகழ்த்துவார். அதுவரை காத்திருங்கள் என குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான் நாடாளுமன்றத்துக்கும் (தேசிய அவை), மாகாண அவைகளுக்கும் நேற்று தேர்தல் நடைபெற்றது. காலை 8 மணிக்குத் தொடங்கிய தேர்தல் மாலை 5 மணி வரை நடைபெற்றது. இந்த தேர்தலில் 18 ஆயிரம் வேட்பாளர்கள் களம் கண்டனர். நாடு முழுவதும் 90,675 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றில், 16,766 வாக்குச் சாவடிகள் பதற்றமானவை என அறிவிக்கப்பட்டிருந்தன.

தேர்தல் பணியில் 14 லட்சம் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். தேர்தலை முன்னிட்டு நேற்று முன்தினம் வியாழக்கிழமை விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது. தேர்தலை முன்னிட்டு செல்போன்களுக்கான இணையசேவைதற்காலிகமாக நிறுத்தப்பட்டது. ஒரு சில இடங்களில் வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்த போதிலும், பெருமளவில் தேர்தல் அமைதியாக நடந்து முடிந்தது.

# ஆத்திரத்தை தூண்டினால் அழித்துவிடுவோம்

## தென் கொரியாவுக்கு வட கொரிய தலைவர் மிரட்டல்



**சியோல் : பிப். 10,**

**வட கொரிய தலைவர் கிம் ஜாங் உன் சமீபத்தில் ராணுவ வீரர்களிடையே பேசும்போது, போருக்கு தயார் நிலையில் இருக்கும்படி தெரிவித்தார்.**

வட கொரிய தலைவர் கிம் ஜாங் உன், தனது நாட்டின் ஆயுத பலத்தை அதிகரித்து அச்சுறுத்துவதாலும், பதில் நடவடிக்கையாக அமெரிக்கா, தென் கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் ஒருங்கிணைந்த ராணுவ பயிற்சிகளை தீவிரப்படுத்துவதாலும் கடந்த சில மாதங்களாக கொரிய தீபகற்பத்தில் பதற்றம் அதிகரித்துள்ளது.

தென் கொரியாவுடனான அனைத்து பொருளாதார ஒத்துழைப்பையும் முறித்துக்கொள்வதாக வட கொரியா அறிவித்துள்ளது. சமீபத்தில் ராணுவ வீரர்களிடையே கிம் ஜாங் உன் பேசும்போது, போருக்கு தயார் நிலையில் இருக்கும்படி தெரிவித்தார்.

இந்த பரபரப்பான சூழ்நிலையில், வட கொரிய தலைவர் கிம் ஜாங் உன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பாதுகாப்பு அமைச்சகத்திற்கு சென்று பணிகளை பார்வையிட்டார். அப்போது பேசிய அவர், தென் கொரியாவுடன் தூதரக உறவை தொடரவோ பேச்சுவார்த்தை நடத்தவோ விருப்பம் இல்லை என்றும், தொடர்ந்து ஆத்திரமூட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டால் தென் கொரியாவை வட கொரியா அழித்து நிர்மூலமாக்கிவிடும் என்றும் மிரட்டல் விடுத்தார்.

தென் கொரியாவுடனான உறவுகளைத் துண்டிப்பது தொடர்பான சமீபத்திய நகர்வுகள், ராணுவம் தனது அதிகாரத்தை முழுமையாக பயன்படுத்த அனுமதிப்பதாகவும், எப்போது தூண்டப்பட்டாலும் தென் கொரியாவை தாக்கி அழிக்க சட்டப்பூர்வ அனுமதியை பெறுவதாகவும் கிம் தெரிவித்துள்ளார்.

# சுவிட்சர்லாந்தில் ரெயிலை கடத்திய இளைஞர் பயணிகள் பிணைக்கைதிகளாக பிடிப்பு



**பெர்னே : பி. 10,**

**இந்த கடத்தல் சம்பவம் குறித்து ரெயிலின் கண்டக்டர் போலீசாருக்கு தகவல் தெரிவித்துள்ளார்.**

சுவிட்சர்லாந்தில் 14 பயணிகள் மற்றும் 1 கண்டக்டருடன் யவெர்டனில் உள்ள ரெயில் நிலையத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு நின்று கொண்டிருந்த ரெயிலை மர்ம நபர் கடத்தியுள்ளார். அந்த மர்ம நபர் பயணிகள் மற்றும் கண்டக்டரை கத்தி மற்றும் கோடாரியால் மிரட்டி ரெயிலில் பணய கைதிகளாக பிடித்து வைத்துள்ளார். இந்த சம்பவம் குறித்து ரெயிலின் கண்டக்டர் போலீசாருக்கு தகவல் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார் முதலில் வாட்ஸ்அப் மூலம் அந்த நபரிடம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். அப்போது அந்த நபர் முதலில் ஈரானின் பிரதான மொழியான பார்சி மொழியிலும் அதன் பிறகு ஆங்கிலத்திலும் பேசியதாகவும் கூறப்படுகிறது.

இந்த பேச்சுவார்த்தை சுமார் 4 மணி நேரமாக தொடர்ந்த நிலையில், இறுதியில் ரெயிலில் அதிரடியாக போலீசார் நுழைந்துள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த அந்த நபர் கோடாரியால் போலீசாரை தாக்க பாய்ந்ததால் வேறு வழியில்லாமல் போலீசார் அந்த கடத்தல்காரனை சுட்டுக் கொன்றுள்ளனர். இதையடுத்து பயணிகள் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டதாக போலீசார் தெரிவித்துள்ளனர். இந்த கடத்தலில் ஈடுபட்ட அந்த நபர் யார் என்பது குறித்த தகவல்களை போலீசார் இதுவரை வெளியிடவில்லை. இந்த சம்பவம் குறித்து போலீசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஐஸ்லாந்தில் வெடித்து சிதறிய எரிமலை



**ரெய்காவிக் : பிப். 10,**

**ஐரோப்பிய நாடான ஐஸ்லாந்தில் 30-க்கும் மேற்பட்ட செயல்படும் எரிமலைகள் அமைந்துள்ளன.**

அதில் கிரின்டாவிக் நகரில் உள்ள எரிமலை நேற்று முன்தினம் வியாழக்கிழமை திடீரென பயங்கர சத்தத்துடன் வெடித்துசிதறியது. அப்போது அந்த எரிமலையில் இருந்து விண்ணை முட்டும் அளவுக்கு தீப்பிழம்புகள் வெளியேறின. இது சுமார் 3 கிலோ மீட்டர் தூரத்துக்கு நெருப்பு குழம்புகளாக ஓடியது.

இதற்கிடையே அந்த பகுதியில் வசிப்பவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர். இந்த சம்பவத்தால் மக்கள் சிறிது நேரம் பதற்றம் அடைந்தனர். இதன் சமீபத்திய எரிமலை வெடிப்பு கடந்த டிசம்பர் மாதத்தில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

# செல்போன் தயாரிப்பில் பின்தங்கிய சீனா

## முன்னேறி வரும் இந்தியா



**புதுடெல்லி : பிப். 10,**

**செல்போன் மற்றும் அதன் உதிரி பாகங்கள்தயாரிப்பில் உலகின் முன்னணி நாடாக இருந்து வந்த சீனா தற்போது அந்த தொழிலில் கடும் பின்னடைவை சந்தித்துள்ளதாகக் கூறப்படுகிறது. அதேசமயம் அந்தத் தொழிலில் இந்தியா அதில் வேகமாக முன்னேறி வருவது உலக நாடுகளை வியக்க வைத்திருக்கிறது.**

உலக அளவில் செல்போன் உற்பத்தி மற்றும் அதற்கான உதிரிப் பாகங்கள் தயாரிப்பு ஏற்றுமதியில் இத்தனை ஆண்டுகளாக சீனா ஆதிக்கம் செலுத்தி வந்தது. ஆனால், இந்தியாவின் குறிப்பிட்ட சில நடவடிக்கைகளால் சீனாவின் இந்த மார்க்கெட் இப்போது பெரும் பின்னடைவைச் சந்தித்துக் கொண்டிருப்பதாக தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

இதற்கு முன்பு இந்தியாவில் உள்ள செல்போன் தயாரிப்பு நிறுவனங்களுக்கு தேவையான செல்போன் பாகங்கள் அனைத்தும் சீனாவிலிருந்தே இறக்குமதி செய்யப்பட்டன. ஆனால், இப்போது இந்தியா சீனாவிலிருந்து உதிரிப்பாகங்களை வாங்குவதை பெருமளவு கட்டுப்படுத்தியுள்ளது. சீனாவை புறந்தள்ளிவிட்டு வியட்நாம், அமெரிக்கா போன்ற நாடுகளில் இருந்து 'சிப் செட்' களை பெற இந்தியா திட்டமிட்டுள்ளது.

இதன் காரணமாக, சீனாவின் செல்போன் உற்பத்தி தொழில் பெரும் நஷ்டத்தை சந்தித்துள்ளதாக கூறப்படுகிறது. அதுமட்டுமின்றி, இந்திய அரசு பிஎல்ஐ திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிப்பதால், பல பெரிய சிப் தயாரிப்பு நிறுவனங்கள் இந்தியாவில் தொழில் தொடங்கியுள்ளன. இதன் காரணமாகவும் சீனாவின் செல்போன் உற்பத்தியானது பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தியாவின் இந்த அதிரடி நடவடிக்கைகளால் சீனாவின் மிகப்பெரிய சிப் தயாரிப்பு நிறுவனமான 'செமிகண்டக்டர் மேனுஃபேக்சரிங் இன்டர்நேஷனல் கார்ப்பரேஷன்' பெரும் நஷ்டத்தை சந்தித்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. நான்காவது காலாண்டில் இந்நிறுவனம் 55 சதவீத இழப்பை சந்தித்துள்ளது. இதற்கு, உலகளாவிய தேவை குறிப்பாக இந்திய வணிகத்தில் அதன் தேவை மிகவும் குறைந்துள்ளது காரணமாகக் கூறப்படுகிறது. இதுபோல சீனாவின் பல முன்னணி செல்போன் உற்பத்தி நிறுவனங்களுக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

# பருவநிலை மாற்றத்தால் காணாமல் போன கடல் – அதிர்ச்சி தகவல்



**கஜகஸ்தான் : பிப். 10,**

**கஜகஸ்தானுக்கும், உஸ்பெகிஸ்தானுக்கும் இடையே 'ஆரல்' எனும் கடல் அமைந்துள்ளது. இந்த கடல் 68 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவை கொண்டது. இது உலகின் 4-வது பெரிய கடல். 1960-ல் சோவியத் நீர்ப்பாசனத் திட்டங்களால் ஆறுகள் திசைமாறிய பிறகு இது சுருங்கத் தொடங்கியது.**

2010-ல் பெரும்பாலும் வறண்டது. 'ஆரல்' கடல் காணாமல் போனதற்கான காரணம் குறித்து விரிவாக ஆய்வு நடந்தது. 1960-ல் சோவியத் யூனியன் கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான் மற்றும் துர்க்மேனிஸ்தான் ஆகிய வறண்ட சமவெளிகளில் நீர்ப்பாசன நோக்கத்திற்காக ஆற்றுத்தண்ணீர் திசை திருப்பப்பட்டது.

இப்பகுதியின் 2 பெரிய ஆறுகளான வடக்கில் சிர்தர்யா மற்றும் தெற்கில் அமுதர்யா ஆறுகள் பாலைவன பகுதியில் பருத்தி மற்றும் பிற பயிர்கள் உற்பத்தி செய்வதற்காக திசைதிருப்பி விடப்பட்டன. இதனால் ஆரல் கடல் வற்ற தொடங்கியது. ஆறுகளின் தண்ணீரைத் திருப்பி பாலைவனத்தைவிளைநிலமாக உருவாக்கிய பிறகு, நீர்வரத்து வெகுவாகக் குறைந்து கடல் முழுவதும் ஆவியாகிவிட்டது. கடந்த 50 ஆண்டுகளில் ஆரல் கடல் முழுவதும் வற்றி காணாமல் போய் நிலம் போல் மாறிவிட்டது. இது தற்போது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# பணம் பட்டுவாடாவில் தாசில்தாரை தாக்கியதாக வழக்கு; நீதிமன்றத்தில் மு.க.அழகிரி நேரில் ஆஜர்





# பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பான நகரமாக சென்னை உள்ளது : காவல் ஆணையர்

# இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்கக் கோரி பிரதமர் முதல்வர் கடிதம்




சென்னை / புதுக்கோட்டை | 10.02.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

தர்பாரா சிங் , பஞ்சாபின் முன்னாள் முதலமைச்சர் (பி.1916) (இ.1990)



சு. ராஜம் , தமிழக ஓவியர், திரைப்பட நடிகர் (பி.1919) (இ.2010)



நாஞ்சில் கி. மனோகரன் , தமிழக அரசியல்வாதி (பி.1929) (இ.2000)



தா. கிருஷ்ணன் , தமிழக அரசியல்வாதி (பி.1937) (இ.2003)



## இன்றைய நினைவு நாள்

யூகி மைக்கேல் அந்தொனியாடி , கிரேக்க-பிரான்சிய வானியலாளர், சதுரங்க வீரர் (பி.1870) (இ.1944)



என். கோபாலசாமி அய்யங்கார் , இந்திய அரசியல்வாதி (பி.1882) (இ.1953)



கே. தவமணி தேவி , இலங்கை-இந்தியத் திரைப்பட நடிகை (இ.2001)



கிரீஷ் புத்தன்சேரி , மலையாளத் திரைப்பாடலாசிரியர் (பி.1957) (இ.2010)

